கல்கி

பொருளடக்கம்

மலர் 6 இதழ் 15 | 1946 நவம்பர் 10 | விய ஐப்பசி 25

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

சென்னை கவர்னர் ஸர் ஆர்ச்சிபால்ட் நை அவர்களை வாழ்த்துகிறோம்.

ஸர் நை ரொம்ப நல்ல மனிதர்; கால நிலைமை அறிந்த லௌகிக புருஷர். பாருங்கள், காகிதக் கிராக்கி காரணமாகப் பத்திரிகைகளில் ஏற்பட்டிருக்கும் இட நெருக்கடியையும் பத்திரிகைக்காரர்களின் கஷ்டத்தையும் அறிந்து தமது பெயரை ஒரே அக்ஷரத்தில் ரத்தினச் சுருக்கமாக அமைத்துக் கொண்டு வந்திருக்கிறார்!

இரண்டாவதாக ஸர் நை ரொம்ப அதிர்ஷ்டக்காரர். ஸர் ஆர்தர் ஹோப்பைப் போல் இவர் யுத்தம் நடந்துகொண்டிருந்த சங்கடமான சமயத்தில் கவர்னர் பதவியை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் யுத்தத்தை நடத்தும் மகத்தான பொறுப்பும், யுத்த அபாயத்திலிருந்து சென்னை மாகாணத்தைக் காப்பாற்ற வேண்டிய சிரமமும் இவருக்கு இல்லாமற் போய்விட்டது. யுத்தத்துக்காக ஆள் சேர்க்கும் வேலையோ, நிதி வசூல் செய்யும் கஷ்டமோ ஒன்றுமே இல்லை. யுத்தம் முடிந்து ஆற அமர கவர்னர் பதவியை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அப்படித்தான் வந்தாரே, மாகாணத்தின் நிர்வாகப் பொறுப்பாவது இவர் தலையில் விழுந்ததா? அதுவும் இல்லை. அதிர்ஷ்டவசமாக இதற்குள் காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டு விட்டது. எனவே, மாகாணத்தில் உணவுப் பஞ்சம் வந்தாலும் துணிப் பஞ்சம் வந்தாலும் எல்லாவற்றையும் சமாளிப்பதற்குக் காங்கிரஸ் மந்திரிகள் இருக்கிறார்கள்.



ஆனாலும் நமது கவர்னர் துரை சும்மா இருக்கவில்லை. ஊர் ஊராகச் சுற்றுகிறார். மாகாணத்தின் உணவுப் பஞ்சத்தை நேரில் பார்த்து அறியும் பொருட்டுப் பல ஜில்லாக்களுக்கு நேரில் விஜயம் செய்து விட்டு வந்திருக்கிறார். சர்க்காரின் உணவு சேகரிப்பு சம்பந்தமாக மாகாணவாசிகளின் ஒத்துழைப்பைப் பாராட்டிப் பேசியிருக்கிறார். அத்துடன் மட்டுமில்லை. ஸர் நை தம்முடைய சுற்றுப் பிரயாணத்தின்போது தஞ்சாவூர் ஜில்லா அய்யம்பேட்டை பள்ளிக்கூடம் ஒன்றில் மாணவர்களைப் பார்த்து, ''நீங்கள் எல்லோரும் தினசரி முக்கால் மணி நேரம் நூல் நூற்கவும் துணி நெய்யவும் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கைத்தொழில் கல்வி அவசியம் என்றும் அதைக் கற்காமல் ஏட்டுக் கல்வி மட்டும் கற்பதால் பயனில்லை என்றும் வற்புறுத்தியிருக்கிறார். ஸர் ஆர்ச்சிபால்ட் நை அவர்களுக்குக் கைத்தொழிலில் உள்ள பற்றுதலுக்காக அவரைப் பாராட்டுகிறோம்.

சென்னை மாகாணத்தின் நிர்வாகம் ஓரளவு திறமையுடன் நடந்தேறி வருவதற்கு நமது கவர்னரும் ஒரு முக்கிய காரணம் என்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

கிடைப்பது சொற்பமே யாகும்போது

—சிறந்தவைகளையே பார்த்து வாங்குங்கள்!

இந்தியாவில் எல்லா மில்லுகளையும் போலவே நாங்களும், சர்க்கார் கட்டுப்பாடுகளனுசரித்து முக்கியாவசியமான துணி ரகங்கள் மட்டுமே தயாரித்து வருகிறோம். எனினும், எங்களது தற்போழுதைய ட்ரில்கள், ட்வில்கள், கோட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், லாங்கிலாத்து — எல்லாம், பக்கிங்ஹாம் & கர்னடிக் மில்ச் சரக்குகளின் நிரந்தர எடுத்துக்காட்டுகளா யிருந்து வந்துள்ள அதே உழைப்புத் தன்மையும், இழை நேர்மையும் வாய்ந்தவைகள்தான்.

உலகின்லெங்குமே தலைவிரித்தாடும் இந்த ஜவுளிப் பஞ்சத்தின்போது, கிடைக்கும் சொற்பத் துணிமணிகளைக் கொண்டு இன்னும் பல காலம் சமாளித்து வருவதை விடுத்து நம்மனை வருக்கும் வேறு கதிமோக்ஷமில்லை. இப் பஞ்சகாலத்தில், உங்கள் பணத்திற்குச் சிறந்த பெறுமதி கிடைக்க, கீழே காணும் வர்த்தக முத்திரைகளை அறிகுறியாகக் கொண்ட பக்கிங்ஹாம் & கர்னடிக் மில்ச் சரக்குகளையே, சாத்தியமாகும்போதெல்லாம் மறவாமல் வாங்குங்கள்.

யுத்தகாலம்

சென்ற ஆறு ஆண்டுகளில் காங்கள் சர்க்காருக்கு 43,20,00,000 கஜம் துணி சப்ளை செய்திருக்கிறோம். அனது, யுத்த காரியங்களுக்காக வுள்ள எங்களது துணி யுற்பத்தி வருடத்தில் 41·000 மைலெனக் காட்டுகிறது. ஏழெட்டு மாதம் கூடுகையிலுள்ள உற்பத்தியானது நம பூமியை ஒருதரம் சுற்றிக் கட்டப் போதுமான நீளம் வருமென்றால் பாருங்களேன்!



பக்கிங்ஹாம் & கர்னடிக் மில்தான் 1900-ல் இந்தியாவில் காக்கித் துணி செசவை முதன் முதலாக ஆரம்பித்தவர்கள், யுத்தகாலத்தில் அவர்கள் எப்போதும், ஏரான பொறுப்பை மேற்கொண்டதான் செய்திருக்கள்.

சமாதான காலம்

எங்களது இன்றைய உற்பத்தியளவு மாதம் 60,00,000 கஜங்களுக்கு மேலாகவே வரும். ஆனால் ரயில் போக்கு வரவுக் கஷ்டங்களால், சில தூர ஸ்தலங்களுக்கு எங்களால் சரக்குகள் தாராளமாக விநியோகிக்க முடிவதில்லை.

இரசாயனப் பொருட்களுக்கும் சாயங்களுக்கும் ஏற்பட்டுள்ள பஞ்சம் காரணமாக, யுத்தத்திற்கு முன் ஜனங்களின் மனதைக் கொள்ளை கொண்டிருந்த அனேக ரகங்களும், மற்றும் பற்பல கலர் டிஸைன்களும் தயாரிப்பது சாத்தியமாகாம லிருக்கிறது. ஆனால், இந்தத் தடை தாற்காலிகமென்றே நம்புகிறோம்.

இதற்கிடையே, நாங்கள் ஏராளமாகத் தயாரிக்கும் அவசிய துணி திறுசுகள் உங்கள் உபயோகத்திற்குகந்தவைதான்-நீடித்துழைக்கவும் செய்யும்.

சர்க்கார் கட்டுப்பாடு அமுலுக்கு வருவதற் கெத்தனையோ முன்பு, நாங்கள் விலைகளை மலிவாக்கியே யிருந்தோம். எங்கள் சரக்குகள் கட்டுப்பாடு விலைகளில். உங்கள் பணத்திற்குச் சிறந்த பெறுமதியாகவே இன்னும் பெரும்பாலு மிருந்து வருகின்றன.

தி பக்கிங்ஹாம் & கர்னடிக் கம்பெனி, லிட்.,

சென்னை

மானேஜிங் ஏஜண்டுகள்: **பின்னி & கோ., (சென்னை) லிட்.**

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 14

என்ன சேதி?

அம்பேத்கரின் அதிர்வேட்டு

லண்டனுக்குக் காவடி தூக்கிக் கொண்டு போயிருக்கும் நம்முடைய மகத்தான ஹரிஜனத் தலைவர் டாக்டர் அம்பேத்கர் அங்கே தீபாவளி சமயமாகப் பார்த்து ஓர் அதிர்வேட்டுக் கிளப்பியிருக்கிறார். மேற்படி அதிர்வேட்டு அவருக்கோ நமக்கோ புதியது அல்ல. டாக்டர் அம்பேத்கரை வைசிராயும் மற்றவர்களும் கைவிட்டு அரசியல் உலகத்தில் அவருக்கு இடம் இல்லாமற் போகும் போதெல்லாம் அவர் அத்தகைய அதிர்வேட்டைக் கிளப்புவது வழக்கம்.

டாக்டர் அம்பேத்கர் கிளப்பியிருக்கும் மேற்படி அதிர்வேட்டு என்னவென்றால், காந்திஜியும் காங்கிரஸும் ஹரிஜனங்களுக்கு அரசியல் சுதந்திரம் கொடுக்காவிட்டால் ஹரிஜனங்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவி விடுவார்களாம்.

கோடிக்கணக்கான நம்முடைய ஹரிஜன சகோதரர்கள் வேறு மதத்தைத் தழுவுவதென்பது ஹிந்து மதத்துக்கு மிக்க பாதகமானது, ஆபத்தானது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், மேற்படி பாதகமானதும் ஆபத்தானதுமான விஷயம் டாக்டர் அம்பேத்கருடைய வாயிலிருந்துதான் வருகிறது என்பதை அறியும்போது நமக்கு அளவு கடந்த நிம்மதி உண்டாகிறது. அம்பேத்கருடைய வார்த்தையைக் கேட்பதற்கு நம்முடைய மாகாணத்தில் சிவராஜையும் வடக்கே ராஜபோஜ் என்பவரையும் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? டாக்டர் அம்பேத்கருடைய வார்த்தையை எல்லா ஹரிஜனங்களும் கேட்பதாயிருந்தால், சென்ற பொதுத் தேர்தலில் அவர்கள் அம்பேத்கரையும் அவருடைய கோஷ்டியையும் அல்லவா ஆதரித்திருப்பார்கள்? லண்டனுக்குக் காவடி தூக்கிக்கொண்டு போய் சர்ச்சிலின் வீட்டு வாசலிலும் ஆட்லியின் வீட்டு வாசலிலும் காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் நேராது அல்லவா?

எட்டுக் கோடி ஹரிஜன மக்களும் தம்மைப் பின்பற்றுவார்களென்று நினைத்துக்கொண்டு டாக்டர் அம்பேத்கர் இஸ்லாம் மதத்தைத் தழுவினால் அவர் நிச்சயமாக ஏமாறுவார் என்பதில் சந்தேகமே இல்லை.

யாருக்குத் தெரியும்?

நம்முடைய உணவு மந்திரி டாக்டர் ராஜேந்திர பிரஸாத் அவர்கள் இடைக்கால சர்க்காரில் பதவியேற்ற பிறகு செய்து வரும் காரியங்களைப் பார்த்து வரும் நாற்பது கோடி இந்திய மக்களும் மூக்கின்மேல் விரலை வைத்து எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்று அதிசயப்பட்டால் அதில் அதிசயம் எதுவும் இல்லை.

ராஜன்பாபு உணவு மந்திரியாவதற்கு முன்பு அவரைப் பற்றி ஜனங்களுக்குத் தெரிந்ததெல்லாம், அவர் தங்கமான மனிதர்; பரம சாது; காந்திமகானிடத்தும் அவருடைய அஹிம்சைக் கொள்கையிடத்தும் பரம பக்தி விசுவாசம் பூண்டவர்; அந்தரங்க சுத்தியும் எளிய வாழ்க்கையும் கொண்ட தன்னலங் கருதாத உத்தமர்; அத்தகைய உத்தம புருஷரை இந்தப் பாழாய்ப்போன ஆஸ்த்மா வியாதி இந்தப் பாடு படுத்துகிறதே என்பதேயாகும்.

ஆனால், மேலுக்கு நல்லவர் போலவும் பரமசாது போலவும் தோன்றிய இந்தப் பொல்லாத ராஜேந்திர பிரஸாத் நீர்

வாகத்திலும் இத்தனை அசகாய சூரராக இருப்பார் என்பது யாருக்குத் தெரியும்? பயங்கரமான இந்தப் பஞ்சத்திலிருந்து நாற்பது கோடி இந்திய மக்களையும் பாதுகாக்கக் கூடிய சக்தி அவருக்கு இருக்கும் என்பது யாருக்குத் தெரியும்?

ராஜன் பாபு தாம் பதவியேற்ற கொஞ்ச காலத்துக்குள்ளாக மற்றெல்லோரைக் காட்டிலும் விரைவாக தேச மக்களின் நன்மதிப்புக்கும் புகழுக்கும் பாத்திரமானது அவருடைய தனிப் பெரும் பாக்கியமாகும்.

ஐந்து வருஷத் திட்டம்

இத்தகைய உற்சாகமும் நிர்வாகத் திறமையும் மிகுந்த ராஜன் பாபு இந்த உணவுப் பிரச்னை விஷயத்தில் தம்முடைய தீர்க்க தரிசனத்தையும் காட்டியிருக்கிறார். இந்த வருஷம் பஞ்சத்தைத் தீர்ப்பதுடன் மாத்திரம் அவர் நிற்கவில்லை. அடுத்த வருஷம் - அதற்கடுத்த வருஷம் - அதற்கும் அடுத்த வருஷம் இந்த மாதிரியான ஆபத்து எதுவும் நிகழாதிருக்க வேண்டும் என்பதற்காக நன்றாக யோசித்து ஒரு ஐந்து வருஷத் திட்டமும் தயாரித்திருக்கிறார். மேற்படி ஐந்து வருஷத் திட்டத்தின்படி இந்திய உணவுப் பொருள் உற்பத்தி வருஷமொன்றுக்கு 40 லட்சம் டன் அதிகரிக்குமாம். சென்ற வாரம் மத்திய சட்ட சபையில் நடந்த விவாதத்தின்போது ராஜன் பாபு இதைப் பற்றி விவரமாகவும் விளக்கமாகவும் சொல்லியிருக்கிறார். இவ்வாறு உணவுப் பொருள் உற்பத்தி செய்வதென்றால் அது தானாக உற்பத்தியாகுமா? விவசாயிகளின் ஒத்தாசை அவசியம் அல்லவா? ஆகவே, விவசாயிகளுக்கு மிகவும் இன்றியமையாததான கிணறுகள், குளங்கள் முதலியவற்றை வெட்டுவதற்கும் தண்ணீர் பாய்ச்சும் சாதனங்கள், எரு, நல்ல விதைகள், இயந்திரக் கலப்பை முதலியவற்றைச் சப்ளை செய்வதற்கும் சர்க்கார் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

சர்க்கார் விவசாயிகளின் உதவிக்கு வந்தால், விவசாயிகள் உணவுப் பொருள் உற்பத்தியை உற்சாகத்துடன் பெருக்குவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இத்தகைய ஐந்து வருஷத் திட்டம் நன்றாக நிறைவேறுமென்றும், இனிமேல் ஒரு காலத்திலும் இந்தியாவில் பஞ்சம் வராதபடி செய்த பெருமையை ராஜன் பாபு அடைவாரென்றும் எதிர்பார்க்கிறோம்.

வெட்ட வெளிச்சமாகிறது!

ஐக்கிய தேச மகா சபையில் தென்னாப்பிரிக்கா மீது இந்தியா செய்திருக்கும் புகாருக்குப் பதிலாக தென்னாப்பிரிக்க சர்க்கார் 46 பக்கம் கொண்ட ஒரு பிரம்மாண்டமான யாதாஸ்தை மேற்படி மகா சபையிலே சமர்ப்பித்திருக்கிறார்களாம். அதில், இந்தியர்களின் நன்றி கெட்ட தன்மையைத் தென்னாப்பிரிக்க சர்க்கார் வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறார்கள்.

தென்னாப்பிரிக்காவிலே இந்தியர்கள் எல்லோருடனும் சரி சமத்துவமாகக் கைகோத்துக்கொண்டு உலவுவதாகவும் அங்கே அவர்கள் என்ன தொழில் வேண்டுமானாலும் செய்யலாமென்றும் எத்தனை முறை வேண்டுமானாலும் தாராளமாக மூச்சு விடலாமென்றும் தென்னாப்பிரிக்க சர்க்கார் அத்தனை விஷயங்களுக்கும் பரிபூரண சுதந்தரம் கொடுத்திருப்பதாகவும் ஸ்மட்ஸ் சர்க்கார் மேற்படி யாதாஸ்திலே சொல்லியிருக்கிறார்கள்.

தென்னாப்பிரிக்க சர்க்கார் இந்திய மக்களுக்குச் செய்திருக்கும் மேற்படி

எல்லாவிதமான நன்மைகளைக் காட்டிலும் ஹரிஜன மக்களுக்கு அவர்கள் அளித்திருக்கும் சுதந்தரம்தான் மேற்படி யாதாஸ்திலே முக்கிய ஸ்தானம் பெறுகிறது. ஜெனரல் ஸ்மட்ஸ் பல்லின் மேல் நாக்கைப் போட்டுக்கொண்டு வெகு தைரியமாகச் சொல்லுகிறார்: தென்னாப்பிரிக்காவிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களைப் போலல்லாமல் ஐரோப்பியர்களுக்குச் சரி நிகர்சமமாக வாழ்கிறார்களாம்.

ஜெனரல் ஸ்மட்ஸ் ஜாதி ஹிந்துக்களையே தாழ்த்தப்பட்ட மக்களாக்கி அவர்கள் சேரிகளில் வாழ வேண்டுமென்று சொல்லும்போது, அங்கு வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் மாத்திரம் எல்லா வகையான சுதந்தரத்துடனும் வாழுவதாக அவர் சொல்லுவது எத்தகைய பச்சைப் புளுகு என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இத்தகைய பச்சைப் புளுகுகள் நிறைந்த யாதாஸ்தை வாசித்து ஐக்கிய தேசமகா சபை தன்னுடைய அருமையான காலத்தை வீணாக்காமல் அதை அப்படியே குப்பைத் தொட்டியில் போடுமென்று எதிர்பார்க்கிறோம்.

பல்லாண்டு வாழ்க!

எட்டயபுரம் மகாராஜா அவர்கள் என்றும் சிரஞ்சீவியாக வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம். அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பல ஜன்ம தினக் கொண்டாட்டங்களை இன்னும் விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்றும் விரும்புகிறோம்.

மகாராஜா அவர்கள் சென்ற வருஷம் தம்முடைய பிறந்த நாள் வைபவத்தின் போது தம்முடைய சமஸ்தானத்திலுள்ள எல்லாக் கோவில்களையும் குளங்களையும் ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டு சரித்திரப் புகழுடைந்தது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இந்த வருஷம் அதைக் காட்டிலும் மற்றொரு சிறப்பான காரியம் அவர் செய்யப் போகிறாராம். முந்நூறு கைராட்டைகளைத் தம்முடைய பிறந்ததினப் பரிசாக எட்டயபுர மக்களுக்கு வழங்கப் போகிறாராம். விரைவில் எட்டயபுரம் சேவா கிராமம் போலத் தோற்றம் அளித்தால் அதில் அதிசயம் எதுவும் இல்லை.

மகாராஜா அவர்கள் தம்முடைய ஒவ்வொரு பிறந்ததின விழாவின் போதும் இத்தகைய பிரயோஜனமான சிறந்த காரியங்களைச் செய்து வந்தால், அவர் என்றும் சிரஞ்சீவியாக வாழ வேண்டுமென்றும் இன்னும் பல பிறந்த தினக் கொண்டாட்டங்களைக் கொண்டாட வேண்டுமென்றும் யார்தான் விரும்ப மாட்டார்கள்?


பெரிய நஷ்டம்

புகழ்பெற்ற வக்கீலும் பிரபல மிதவாதத் தலைவரும் சென்னை மாகாண அரசியலிலே ஜாம்பவானாக விளங்கி வந்தவருமான சர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் அவர்கள் சென்ற செவ்வாய்க்கிழமையன்று காலமானதை யறிந்து சென்னை மாகாண வாசிகளுக்கு அளவு கடந்த துக்கம் உண்டாயிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.


சர் சிவஸ்வாமி ஐயர் அவர்களுக்குக் கிடைக்காத பெரிய பதவி எதுவும் இல்லை. அவர் அலங்கரிக்காத பதவி எதுவும் இருந்ததில்லை. அரசியல் சட்ட நுணுக்கங்களிலும் ராணுவத் தற்காப்பு விவகாரங்களிலும் அவருக்கிருந்த அளவு கடந்த திறமையைப் போற்றாதவர்கள் யாருமே இல்லையென்று சொல்லலாம். இது ஒருபுறம் நிற்க, சர் சிவஸ்வாமி ஐயர் அவர்கள் ஒரு பெரிய தர்மசீலர். வக்கீல் தொழிலில் தாம் சம்பாதித்த லட்சக் கணக்கான பணத்தை அவர் தாராளமாகத் தர்ம காரியங்களில் செலவு செய்து வந்தார். அத்தகைய பரோபகார சீலரும் அரசியல் நிபுணரும் சிறந்த வக்கீலுமான சர் ஐயர் அவர்கள் மறைந்தது இம்மாகாணத்துக்கு ஒரு பெரிய நஷ்டமாகும். அவருடைய ஆன்மா சாந்தியடைவதாக!

முதல் காண்டாமிருகம்:- 'மிருகத்தனமான காரியம்' என்று அடிக்கடி நம்மைப்பற்றிப் பத்திரிகைகளில் செய்தி வருகிறதாமே?— அது என்ன?

இரண்டாம் காண்டாமிருகம்:— அதுவா? அது நம்மைப் பற்றி ஒன்றுமில்லை; கீழ் வங்காளத்துக்குப் போய்ப் பார்; அது என்னவென்று தெரிந்து விடும்!



காப்பாற்றுங்கள்!



பீஹாரில் நடைபெறும் கலவரங்கள் அடங்கி அமைதி ஏற்படவில்லையேல் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக காந்திஜீ

தீயை அணையுங்கள்!

பயங்கரமான தீ, — பிரளய கால அக்கினியை யொத்த தீ, — தேசத்தையும், தேச மக்களின் க்ஷேமத்தையும், தேசத்தின் நல்ல பெயரையும், தேசம் புதிதாக அடைந்திருக்கும் சுதந்திரத்தையும்கூட எரித்துச் சாம்பலாக்கிவிடக் கூடிய தீ, — நாடெங்கும் அதிவேகமாகப் பரவத் தொடங்கியிருக்கிறது.

ஹிந்து-முஸ்லிம் பகைமை என்கிற தீதான் அது!

* * *

கிழக்கு வங்காளத்தில் மேற்படி தீ பரவி அட்டூழியம் செய்ததைப் பற்றிக் குறிப்பிட்டபோது, அதைக் 'கொள்ளை நோய்' என்று சொல்லியிருந்தோம். அந்தக் கொள்ளை நோயை மற்ற மாகாணங்களுக்கும் பரவ விடாமல் தடுக்கவேண்டும் என்றும் வற்புறுத்தியிருந்தோம்.

ஆனால் நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக விரைவாகவே அந்த நோய் பக்கத்து மாகாணமாகிய பீஹாரில் பரவி விட்டது.

கிழக்கு வங்காளத்தைக் காட்டிலும் பீஹாரில் அதிக பயங்கர ரூபத்தை எடுத்துக் கொண்டு உலாவியது.

காந்தி மகாத்மாவை "உண்ணாவிரதம் கொள்வேன்" என்று சொல்லச் செய்யும் அளவுக்கு அந்தப் பயங்கரப் பிசாசு பீஹார் மாகாணத்தில் அட்டூழியங்களைச் செய்தது.

* * *

அத்தகைய பயங்கரமான தீயை, கொள்ளை நோயை, இரத்த வெறி கொண்ட பிசாசை, முதன் முதலில் ஏவி விட்டவர்கள் மகானுபாவர் ஜனாப் ஜின்னாவும் அவருடைய தலைமையை ஒப்புக்கொள்ளும் முஸ்லிம் லீக் பிரமுகர்களுந்தான்.

அத்தகைய கொடிய காரியத்தைச் செய்வதற்கு நியாயமான காரணமும் இருக்கவில்லை.

தாங்கள் செய்த மகத்தான அரசியல் தவறை மறைத்து மூடி மழுப்புவதற்காகவே அப்படிச் சமூகத் துவேஷமாகிய தீயை ஏற்றினார்கள்; கொள்ளை நோயைப் பரப்பினார்கள்; பிசாசை ஏவினார்கள்.

அந்த மகத்தான அரசியல் தவறு என்ன?

முதலில் அவர்கள் பிரிட்டிஷ் மந்திரிகள் சமர்ப்பித்த நீண்ட கால அரசியல் திட்டம், இடைக்கால அரசியல் திட்டம் இரண்டையும் ஒப்புக் கொண்டார்கள்.

காங்கிரஸ் நீண்டகால அரசியல் திட்டத்தை அங்கீகரித்து, இடைக்காலத் திட்டத்தை மட்டும் அதிலிருந்த குறைகளுக்காக நிராகரித்தது.

உடனே ஜனாப் ஜின்னாவும் முஸ்லிம் லீக்கினரும் இந்திய அரசாங்கமே தங்கள் கையில் வந்து விடுமென்று மனப்பால் குடித்தார்கள்.

பிரிட்டிஷ் மந்திரிகளும் வைஸ்ராயும் அவ்வளவு அநியாயமான முட்டாள்தனத்தைச் செய்யவில்லை.

"நீண்டகால அரசியல் திட்டத்தை ஒப்புக் கொள்ளுகிறவர்களை வைத்து இடைக்கால தேசிய சர்க்கார் அமைப்போம்" என்று உறுதி கூறியிருந்ததை முன்னிட்டுத் தேசிய சர்க்கார் அமைப்பை ஒத்திப் போட்டார்கள்.

பிறகு, நியாயா நியாயங்களை நன்கு ஆலோசித்துச் சீர் தூக்கிப் பார்த்து, பெரும்பான்மைக் கட்சியாகிய காங்கிரஸ் கட்சித் தலைவர் பண்டித ஜவாஹரை அழைத்துத் தேசிய சர்க்காரை அமைக்கச் சொன்னார்கள். ஆனால் முஸ்லிம் லீக் தேசிய சர்க்காரில் சேரச் சம்மதித்தால் ஐந்து ஸ்தானங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று வைஸ்ராய் நிபந்தனை விதித்தார். அதை ஜவாஹரும் ஒப்புக்கொண்டு ஜனாப் ஜின்னாவைத் தேடிச்சென்று ஐந்து ஸ்தானங்களை ஒப்புக்கொள்ளச் சொன்னார்.

ஜனாப் ஜின்னா அதைச் சிறிதும் மரியாதை இல்லாத முறையில் நிராகரித்துவிட்டார். அப்படி நிராகரித்தபோது, லீக்கின் ஒத்துழைப்பு இல்லாமல் தேசிய சர்க்காரே ஏற்படாது என்ற பிரமையில் அவர் இருந்தார்.

அதுதான் ஜனாப் ஜின்னா செய்த தவறு; பெரும் அரசியல் தவறு.

ஆனால், அவர் நினைத்தபடி சிப்பை ஒளித்ததினாலே கல்யாணம் நின்று போகவில்லை. கோழியை எடுத்துக் கொண்டு போனதினாலே ஊரில் சூரியன் உதயமாகாமல் போகவில்லை.

பண்டித ஜவாஹர்லால்ஜியின் தலைமையில் தேசிய சர்க்கார் ஏற்பட்டே விட்டது. ஏற்பட்டதோடல்லாமல் ஜாம் ஜாம் என்று நடந்தும் வந்தது.

கொஞ்ச நாள் வரையில் இதைப் பார்த்துவிட்டு ஜனாப் ஜின்னாவும் முஸ்லிம் லீக் பிரமுகர்களும் தங்களுடைய தவறை உணர்ந்து கொண்டார்கள். வேண்டாம் என்று நிராகரித்த நீண்ட காலத் திட்டத்தையும் ஏற்றுக் கொண்டு தேசிய சர்க்காரில் ஐந்து ஸ்தானங்களையும் ஒப்புக் கொண்டார்கள்.

'ரொம்ப சந்தோஷம்'' என்று நாமும் எழுதினோம். இத்தோடு கதை முடிந்து போயிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்,

துரதிர்ஷ்டவசமாகக் கதை அப்படி முடியவில்லை.

இடை நடுவில் தாங்கள் செய்த தவறின் காரணமாக ஆத்திரங் கொண்டு அவர்கள் ஏவிவிட்ட பிசாசு நாட்டிலே ஆட்சி செலுத்தத் தலைப்பட்டுவிட்டது.

அந்தப் பிசாசுக்கு அவர்கள் 'நேரடி நடவடிக்கை' என்று பெயர் கொடுத்திருந்தார்கள்.

''முஸ்லிம் லீக் இல்லாமல் காங்கிரஸ்காரர்கள் தேசிய சர்க்கார் அமைத்து விடுவார்களா? அப்படிச் செய்தால் 'நேரடி நடவடிக்கை' தொடங்குவோம்'' என்றார்கள்.

இந்த 'நேரடி நடவடிக்கை' என்றால் என்ன என்பது பற்றி வர்ஜா வர்ஜமில்லாமல், நாக்கில் நரம்பில்லாமல், பேசத் தொடங்கினார்கள். ''நாங்கள் நேரடி நடவடிக்கை ஆரம்பித்தால் எது வேணுமானாலும் செய்வோம். அஹிம்சைக் கொள்கை எங்களுக்கில்லை'' என்றார்கள்.

ஆஹா! இந்த மாதிரி விருப்புப் பேச்சுகளின் பலன் எத்தகைய பயங்கர உருவத்தைக் கொள்ளப் போகிறதென்பதை அவர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

எதிர்பார்த்திருக்க வேண்டியது நியாயம்; கடமை. ஆனால் ஆத்திரம் கண்ணை மூடியிருந்தபடியால் இதை எல்லாம் அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

முஸ்லிம்களில் பாமர ஜனங்கள், பாவம், ஒன்றுக்கு இரண்டாக அர்த்தம் செய்துகொண்டார்கள். வெளி அர்த்தத்துக்கு உள் அர்த்தம் செய்து கொண்டார்கள். நெருப்புப் பற்றியவுடனே காற்றும் தானே வந்து சேர்வதுபோல், பாமர முஸ்லிம் மக்களை ஏவிவிட விஷமிகளும் துஷ்டர்களும் தோன்றினார்கள்.

பம்பாயிலும் கல்கத்தாவிலும் கலகம் மூண்டது.

பம்பாய்க் கலகம் மாகாண காங்கிரஸ் சர்க்காரின் தீவிர நடவடிக்கையினால் அன்று முதல் இன்றுவரையில் ஒரு கட்டுக்குள் இருந்து வருகிறது. சமூகத்தின் தினசரி வாழ்க்கை ஓரளவு எப்போதும்போல் நடந்து வருகிறது. அநாகரிக ராட்சதக் கொலை பாதகச் செயல்கள் பம்பாயில் நடைபெறவில்லை. வஞ்சகக் கத்திக்குத்து, கல்லெறி முதலிய காரியங்களுடன் நின்று வருகிறது.

ஆனால், சுஹ்ரவர்த்தியின் லீக் ஆட்சி நடக்கும் கல்கத்தாவிலோ, கலகம் ஆரம்பித்த முதல் இரண்டு நாளைக்குள்ளே சொல்ல முடியாத, நினைக்க முடியாத பயங்கரச்செயல்கள் நடந்து விட்டன. முதல் இரண்டு நாளும் ஒரு சமூகத்தினர் மேற்படி பேய்ச் செயல்களுக்கு ஆளாயினர். ஆனால் அடுத்த மூன்று நாளில் கலகத்தை ஆரம்பித்த கூட்டம் அதிக கஷ்ட நஷ்டங்களை அடைந்தது. இதைப் பற்றி இப்போது விசாரணை ஒன்று ஆரம்பமாகி நடந்துவருகிறது.

இதற்குள்ளே கிழக்கு வங்காளத்தில் ஹிந்துக்கள் மிகச் சிறுபான்மையோராயுள்ள இடங்களிலிருந்து சில செய்திகள் வரத் தொடங்கின.

பண்டித ஜவாஹர்லால் நேரு வெகு அழுத்தமாகச் சொன்னதுபோல் அவை ''செத்துப்போன மனிதர்களையும் குலுக்கிப் போடக்கூடிய'' செய்திகள். அந்தச் செய்திகளைக் கேட்டு உயிருள்ள மனிதர்கள் எல்லாம் எப்படிப் பட்ட பரபரப்பை அடைந்திருப்பார்கள் என்று சொல்லத் தேவையில்லை.

ஆனால் சற்றும் பரபரப்பு அடையாத மனிதர் ஒருவர் இருந்தார். அவர்தான் முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னா. ஆர அமர யோசனை செய்து சாவகாசமாக அவர் ''ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்களுடைய நல்ல பெயரைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது'' என்பதாக ஓர் அறிக்கை வெளியிட்டார்.

''ஏதடா! நாம் கிளப்பிவிட்ட பூதத்தின் செயல்கள்தானே இவை!'' என்று யோசித்துப் பார்த்து, உடனே ஸ்தலத்துக்கு ஓடினாரா? கல்கத்தாவுக்கும் கிழக்கு வங்காளத்துக்கும் விஜயம் செய்தாரா? கிடையாது. யதாஸ்தானத்திலேயே இருந்து மேற்படி சாவதான அறிக்கையை வெளியிட்டார். ''கிழக்கு வங்காளத்தில் ஹிந்துக்கள் என்ன செய்தார்கள்? என்ன விதத்தில் அவர்கள் தங்கள் நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்வது?'' என்றாவது எடுத்துச் சொன்னாரா? மகாராஜன் அதுவும் சொல்லவில்லை. ஏதோ பொத்தாம் பொதுவில் ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் சேர்த்துப் போட்டு வைத்தார்.

எல்லாக் கஷ்டங்களுக்கும் கொடுமைகளுக்கும் மூல காரண புருஷர் இப்படிப் பொறுப்பைத் தட்டிக்கழித்த போதிலும், தேசத்தின் பங்கில் ஏதோ கொஞ்சம் அதிர்ஷ்டம் பாக்கி இருந்தது. காந்தி மகான் கல்கத்தாவுக்ுக் கிளம்பிச் சென்றார். வைஸராய் கிழ் வங்காளத்துக்கே போனார். தேசிய சர்க்காரைச் சேர்ந்த பண்டித ஜவாஹர்லால் நேரு, ஜனாப் லியாகத் அலிகான், சர்தார் வல்லபாய் படேல், ஜனாப் அப்துர் ரப் நிஷ்டர் ஆகியவர்களும் மேற்படி ஸ்தலங்களுக்குச் சென்றார்கள். கோர சம்பவங்கள் நடந்த இடங்களைப் பார்வையிட்டார்கள். எல்லாவற்றிலும் முக்கியமானது, மேலும் அத்தகைய கோர சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுப்பதுதான் என்பதை நன்குணர்ந்து, சரியான முறையில் அறிக்கை யொன்றும் வெளியிட்டார்கள். ''மனிதர்கள் தங்கள் அண்டை அயலில் உள்ளவர்களைத் தாக்கிக் கொல்வதென்பது மிருகத்தனமான காரியம். ஓரிடத்தில் இப்படி நடந்தால் அது தொத்து நோயைப் போல் பரவிக்கொண்டே போகும். தேசமே நாசமாகிவிடும்; ஆகையால் தடுத்து நிறுத்துங்கள்! நெருப்பை அணையுங்கள்!'' என்று வற்புறுத்தினார்கள்.

ஆனால் என்ன துரதிர்ஷ்டம்! அவர்கள் அறிக்கை விடுவதற்குள்ளே அதில் அவர்கள் பயத்துடன் எதிர்பார்த்துக் குறிப்பிட்டிருப்பது ஓரளவு நடந்தேவிட்டது.

கிழக்கு வங்காளத்துக் கொடுமைகளைப்பற்றிய செய்திகள் பக்கத்திலுள்ள பீஹார் மாகாணத்தில் பரவி அங்கே பெரும்பான்மையோராயுள்ள ஹிந்துக்களை வெறிகொள்ளச் செய்துவிட்டது.

வெறி கொண்ட மனிதர்கள் ஹிந்துக்களாயிருந்தாலென்ன? முஸ்லிம்களாயிருந்தாலென்ன? அவர்களுடைய காரியங்கள் மிருகப் பிராயமான காரியங்களாகத்தான் இருக்கும்.

ஒரே ஒரு வித்தியாசம் மட்டுந்தான் இருக்கலாம். முஸ்லிம்கள் வெறிகொள்ளும்போது ஹிந்துக்களைப் பலாத்காரமாக மதம் மாறும்படி செய்வார்கள். ஹிந்து ஸ்திரீகளுக்குப் பலாத்கார மணம் செய்விப்பார்கள். ஹிந்து மதம் மேற்படி இரண்டு காரியங்களுக்கும் இடங் கொடுக்காதபடியால் ஹிந்துக்கள் எவ்வளவு வெறிகொண்டாலும் மேற்படி இரு காரியங்களையும் செய்ய முடியாது.

இப்படியாகக் கிழக்கு வங்காளத்தில் நடந்த கோர சம்பவங்களில் பல பீஹாரில் திரும்பப் பரிமாறப்பட்டன.

ஆனால் நல்ல வேளையாக பீஹார் காங்கிரஸ் சர்க்கார் ஏனோ தானோவென்று இருக்கவில்லை. உடனே மந்திரிகள் தலைக்கு ஒரு மூலையாக ஓடி நிலைமையைச் சமாளிக்கப் பெரு முயற்சி செய்தார்கள்.

தேசிய சர்க்கார் அங்கத்தினர்களும் அங்கே போயிருந்தார்கள்.

பண்டித ஜவாஹர்லால் கொடுமைக்காரர்களை இயந்திர பீரங்கி வைத்துச் சுட உத்தரவு கொடுத்தார்.

காந்தி மகாத்மாவோ, ''இருபத்திநாலு மணி நேரத்துக்குள் கலகம் நிற்காவிட்டால் உண்ணாவிரதம் ஆரம்பிப்பேன்!'' என்றார்.

பாபு ராஜேந்திர பிரஸாத் இதைச் சொல்லி விட்டுத் தமது அருமை பீஹார் மாகாணத்தை நோக்கிக் கிளம்பினார்.

இதனாலெல்லாம் பீஹார் நிலைமை கூடிய சீக்கிரம் சரிப்பட்டு விடும் என்று நம்புகிறோம். இந்தக் ''கல்கி'' இதழ் நேயர்களின் கைக்கு வருவதற்குள் பீஹாரைப் பற்றிய நல்ல செய்தி வந்துவிடும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

* * *

எது எப்படியானாலும் சென்னை மாகாண வாசிகளாகிய நாம் ஒரு விஷயத்தில் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும்.

கிழக்கு வங்காளத்திலும் பீஹாரிலும் தலைவிரித்தாடிய பிசாசு இந்த

மாகாணத்திலும் தலைகாட்ட விடக் கூடாது.

அந்தக் கொள்ளை நோய் இங்கே எட்ட விடக்கூடாது. அந்த நெருப்பு இதுவரை பரவ இடங் கொடுக்கக் கூடாது. தூர வரும்போதே மண்ணை வாரிப் போட்டு அணைத்துவிட வேண்டும். அணைபோட்டுத் தடுத்துவிட வேண்டும்.

கிழக்கு வங்காளத்திலும் பீஹாரி லும் நடந்ததுபோல் மற்ற மாகாணங் களிலும் நடக்க வேண்டு மென்று விரும்புகிற ஒரு மகானுபாவர் இருப்ப தாகத் தெரிகிறது.

அவர் வேறு யாரா யிருக்க முடியும்? காயிதே ஆஜம் ஜின்னாதான்!

மத்திய மாகாணத்திலும் சென்னை மாகாணத்திலும் ஹிந்துக்கள் முஸ் லிம்களைக் கொடுமைப் படுத்துவது பற்றி அவருக்குச் செய்திகள் வந்து குவிந்துகொண் டிருக்கின்றனவாம்!

அவருக்கு அந்தச் செய்திகளை அனுப்பிய அரிச்சந்திர நிருபர்கள் யாரோ தெரியவில்லை!

அப்படிப்பட்ட செய்திகளை ஆதார மாகக் கொண்டு ஜனாப் ஜின்னா மேற் படி மாகாண முஸ்லிம்களுக்கு "பொறுமையா யிருங்கள்!" என்று உபதேசித்திருக்கிறார்.

மத்திய மாகாணத்தில் அம்மாதிரி காரியம் ஒன்றுமே இல்லை யென்று அம்மாகாணத்து முதன் மந்திரி மறுத்துவிட்டார்.

நமது மாகாணத்தில் ஒன்றுமே இல்லை யென்பதையும், இங்கே ஹிந் துக்களும் முஸ்லிம்களும் சொந்த சகோதரர்கள்போல் வாழ்ந்து வரு வதையும் நாம் நேரில் அறிவோம்.

எனவே, ஜனாப் ஜின்னாவின் வாக்கு நமது மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஒரு நாளும் நிறைவேற வேண்டாமென்று பிரார்த்திப்போமாக.

பீஹாருக்கும் சென்னைக்கும் மத்தி யில் மத்திய இந்தியாவும் விந்திய பர் வதமும் பல பெரிய நதிகளும் காடு களும் இருக்கின்றன.

ஹிந்து-முஸ்லிம் சகோதர பாவம் என்னும் பெருஞ் சுவரும் இருக்கிறது.

மேலே கூறிய இயற்கைத் தடை களும் செயற்கைச் சுவரும் சென்னை மாகாணத்தைக் காப்பாற்றட்டும் என்று பிரார்த்திப்போமாக. ஹிந்துக் கள் தங்கள் ஆண்டவனையும் முஸ்லிம் கள் தங்கள் அல்லாவையும் அவ்விதம் பிரார்த்திப்பார்களாக.

சிரஞ்சீவிக் கடிதங்கள்

ஸோமாஸ்

வெளியூரில் படித்துக் கொண்டிருந்த சர்மாவின் புத்திரன் ஓயாமல் அவரைப் பணத்துக்குத் தொந்தரவு செய்து வந்தான். சர்மா அவனுக்குக் கீழ்க்கண்ட கடிதத்தை எழுதினார் :

" அன்புள்ள ராமநாதனுக்கு.

உன் கடிதங்கள் கிடைத்தன. நான் உனக்கு என்ன எழுதுவது என்றே எனக்குத் தோன்றவில்லை. நான் இதுவரையில் உனக்கு எழுதிய கடிதங்களை யெல்லாம் கவனமாய்ப் படித்திருப்பாயானால் உனக்குப் பணத்தின் அருமையைப் பற்றி மீண்டும் நான் எழுதவேண்டிய அவசியம் இராது.

பணம் என்பது, அதனோடு ஒருவன் எவ்வளவு முழுமனதுடன் காதல் புரிகிறானோ, அதுவும் அவனோடு அவ்வளவு காதல் புரியும். பணம் சேர்க்க வேண்டும் என்னும் ஆவல் நம்மிடம் இருந்தால்தான் பணம் சேரும். இந்தச் சந்தர்ப்பத்தில் உனக்கு "பொருள் தனைப் போற்றி வாழ்" என்னும் ஆன்றோர் அமுத மொழியை ஞாபகப்படுத்தி என் கடிதத்தைப் பள்ளிக்கூடப் பாடப் புத்தகமாக்க எனக்கு விருப்பமில்லை. பணத்தின் அருமை பெருமைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள நம் தமிழ்ப் புலவர்கள் நம்மைப் பிற நாட்டுக்குப் போய்த் திண்டாட விட்டு விடவில்லை. தங்கள் வறுமை வாழ்க்கையே சிரஞ்சீவி உதாரணமாக விட்டுச் சென்று விட்டனர்.

பிற நாடுகளில் எல்லாம் வெறும் பணக்காரனாக மட்டும் இருந்துகொண்டு பிரமாதமான புகழையோ செல்வாக்கையோ அடைந்துவிட முடியாது. ஆனால் நம் நாட்டில் பணம் மட்டும் இருந்து விட்டால் போதும். கதியற்றவர்களுக்கு நிதி வழங்குவதென்று ஆரம்பித்து விட்டால், 'கற்பக விருக்ஷம்' என்றும் 'காமதேனு' என்றும் வண்டி வண்டியாகப் புகழ் சம்பாதித்து விடலாம். ஆனால் ஒரு வண்டிப் பணம் சம்பாதிப்பதுதான் மிகவும் சிரமசாத்தியமான காரியம். ஒரு சில ஏழை மாணவர்களுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டுவதிலிருந்தே நான் 'கர்ணன்' என்னும் பட்டப் பெயர் பெற்று விட்டது உனக்குத் தெரிந்ததுதானே! என் கையெழுத்தைப் பெறுவதற்கு எத்தனையோ பேர் நம் வீட்டு வாசலில் 'க்யூ'வில் நின்று தவம் புரிகின்றனர். நான் என்ன அப்படி பிரஹஸ்பதியா? என் பிரயாண நூலாகிய 'மியாமியில் ஒரு நாள்' என்னும் புஸ்தகம் எத்தனையோ ஆயிரம் பிரதிகள் அச்சிட்டும் ஒரு பிரதிகூட ஒருவருக்கும் கிடைக்கவில்லை. காரணம் அது வேகமாக விற்று விட்டதுதான். இவ்வளவுக்கும் என் பணந்தானே காரணம்?

இந்தக் கடிதத்துக்கு நான் பதில் எதிர்பார்க்கவில்லை. நீ இதைப் படித்த பின்புங் கூட என்னிடம் பணத்துக்கு அடி போட மாட்டாய் என்னும் நம்பிக்கைதான் அதற்குக் காரணம். இந்த நீண்ட கடிதம் எழுதின நேரத்தில் 'என் அமெரிக்கா பிரயாணம்' என்னும் நூலை எழுத ஆரம்பித்திருந்தால் பாதி முடித்திருப்பேன். மேற்படி நூலுக்காகப் பிரசுர கர்த்தர்கள் நம் வீட்டு வாசலில் பணமுங் கையுமாகப் 'பாரா' கொடுக்கின்றனர்.

உன் தந்தை"

என்று ஒரு வழியாகக் கடிதத்தை எழுதி முடித்தார் ராவ் சாகிப் ராஜ கோபால சர்மா. இந்தக் கடிதத்தைத் தபாலில் போட்ட பின்புதான் அவருக்கு நிஜமாகவே தூக்கம் வந்தது.

* * *

இதற்குப் பிறகு சேர்ந்தாற்போல் ஏழு எட்டு மாதங்களாக ராவ்சாகிப் ராஜகோபால சர்மாவுக்கு அவர் மகனிடமிருந்து கடிதமே வரவில்லை.

சர்மாவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஓய்வு ஒழிவு இல்லாமல் பணங் கேட்டுத் தொந்தரவு செய்து வந்த அவர் மகன் இப்பொழுது திடீரென்று நல்ல பிள்ளையாகி விடுவது என்றால் அவரால் அதை எப்படி நம்ப முடியும்? ஒரு வேளை தற்கொலை, கிற்கொலை...... சீ! அப்படியிருக்காது! அப்படி அவன் ஏதாவது விபரீத காரியம் செய்து கொண்டிருந்தால் அது இத்தனை நாளைக்குள் பத்திரிகையில் வெளியாகி யிருக்காதா? இந்தமாதிரி முக்கியமான செய்திகளைக்

கூடப் பிரசுரிக்காமல் பத்திரிகைகள் எதற்குத்தான் இருக்கின்றன?

மேலும் இரண்டு வாரங்கள் பொறுத்துப் பார்த்தார் சர்மா. பின்னையிடமிருந்து கடிதம் வரவில்லை. எனவே மீண்டும் அவனுக்கு ஒரு கடிதம் எழுதினார்:

"அன்புள்ள ராமநாதனுக்கு,

எட்டு மாத காலமாக ஏன் கடிதம் எழுதவில்லை? உன்னிடமிருந்து கடிதம் வாராததனால் எனக்கு வருத்தமாயிருந்தாலும் ஒரு விஷயத்தில் மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. என்ன ஆச்சரியம்! எனக்குக் கடிதம் ஓயாமல் எழுதிப் பணம் சம்பாதித்து வந்த நீ இப்பொழுது அதை நிறுத்திவிட்டாய் என்றால் அது ஆச்சரியமில்லையா? நான் முன்பு உனக்கு எழுதிய கடிதம்தான் உன்னை அம்மாதிரி செய்திருக்க வேண்டும். இப்பொழுது செலவுக்கு என்ன செய்கிறாய்? நீ சிக்கனமாக வாழக் கற்றுக் கொண்டு விட்டாய் என்றால் அதுவே எனக்குப் போதும். உன்னுடைய சிக்கன புத்தியை நான் மிகவும் பாராட்டுகிறேன்,

உன் தந்தை."

இரண்டு நாட்களுக்குப் பிறகு, ராவ் சாஹிப் ராஜகோபால சர்மாவுக்கு அவர் மகனிடமிருந்து பின் வருமாறு ஒரு கடிதம் வந்தது:

"அருமை அப்பா அவர்களுக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது. நான் மிகவும் முக்கியமான வேலையில் ஈடுபட்டிருந்ததனால் தங்களுக்கு வெகு நாட்களாகக் கடிதம் எழுத முடியவில்லை. முன்பு தாங்கள் எனக்கு எழுதிய கடிதங்களுக்காக நான் மிகவும் தங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் மாத்திரந்தானா? இமயம் முதல் குமரி வரையில் உள்ள தமிழர்கள், இமயமும் குமரியும் உள்ள வரையில் தங்களுக்குக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் தங்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் "சொஞ்சிவிக் கடிதங்கள்" என்னும் புத்தகத்தின் பிரதியொன்றைத் தங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். தாங்கள் எனக்கு எழுதிய கடிதங்களில் ரஸமாகவும் சுவாரஸ்யமாகவும் இருப்பவைகளைத் திரட்டி நூறு கடிதங்கள் கொண்ட சிறந்த நூலாக வெளியிட்டிருக்கிறேன். இந்தக் கடிதத் தொகுதியின் கடைசிக் கடிதத்துக்காக ரொம்பவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன். தங்கள் சென்றவாரக் கடிதம் அதற்கு மிகவும் பொருத்தமாக அமைந்தது. தங்கள் ரஸமான கடிதங்களைப் பாராட்டி இவ்வூர் ஜில்லா கலெக்டர் ஒரு முன்னுரை அளித்திருக்கிறார். அதையும் நூலில் சேர்த்திருக்கிறேன். புத்தகம் பிரசுரிப்பதில் உள்ள சிரமம் தங்களுக்குத் தெரிந்தது தான். அதனால்தான் தங்களுக்கு இது நாள் வரையில் கடிதம் எழுதவில்லை. மேலும் மேற்படி நூலைப் பிரசுரித்த பிரசுரகர்த்தரிடமிருந்து "சொஞ்சிவிக் கடிதங்கள்" என்னும் நூலுக்காக நான் ரூபாய் இரண்டாயிரம் பெற்றுக்கொண்டு விட்டபடியால் எனக்கு இப்பொழுது பண முடையில்லை. அதனால்தான் இத்தனை நாளும் நான் பணத்துக்காகத் தங்களைத் தொந்தரவு செய்யவில்லை. அடுத்த மாதம் ரூபாய் நூறு அனுப்பி வைக்கவும்.

ராமநாதன்."

இந்தக் கடிதத்தைப் படித்த சர்மாவின் மனம் எப்படியிருந்திருக்கும் என்பது அந்தக் காட்சியை நேரில் பார்த்தவர்களுக்குத் தானே தெரியும்?

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

ஓர் அபூர்வ வயலின் கச்சேரி அக்டோபர் 21உ திருச்சியில் நிகழ்ந்தது. வாசித்தவர் (பாப்பா) கே. எஸ். வெங்கடராமய்யர். சென்ற தலைமுறை வித்வான்களில் நிகரற்ற தலைவராய் விளங்கிய கோவிந்தசாமிப் பிள்ளையின் சீடர் என்பதற்கேற்ப, அக்காலப் பெரிய சங்கீதத்தின் சாயை அன்று அவரது கச்சேரியில் பிரதிபலித்தது. சுருதி சுத்தமான நாத வளப்புடன், ராகங்களை, விரிந்த பிரவாஹுடனும், சஞ்சாரச் சித்திரங்கள் ஒவ்வொன்றிலும் அழுத்தமும், தெளிவும், பாணி அழகும் கொடுத்து, கம்பீரமும், வசீகரமும் கொண்ட வடிவங்களாய் இழைத்தார். கரடி முதல், மணிரங்கு ஈறாக வாசித்த ஆறு ராகங்களும், ஏழு உருப்படிகளும் சளிப்புக் கொடாத இன்னிசை விருந்தாக அமைந்தன. நாட்டக்குறிஞ்சியிலும், சங்கராபரணத்திலும் விழுந்த சில கமக இழைப்புகள் கொஞ்சிக் குலாவுவது போல் மனதை அள்ளின. உருப்படிகளும், ஸ்வரப்ரஸ்தாரங்களும் ராக பாவம் ததும்பி விளங்கின.

20உ சென்னையில் நிகழ்ந்த இரண்டு முதல்தரக் கச்சேரிகளில், பிற்பகலில் கேட்ட, விஞ்சமூரி வரதராஜய்யங்காரின் ஒரு மணி நேரக் கச்சேரி ஒன்று. நயசாரீரம், வெகு சரளமான உதவுபடி, பிர்க்காப் பொழிவு, இவை கொண்டு பாடியவை பெரும்பாலும், மத்யமகால விறுவிறுப்புடன் கலகலப்பாயிருந்தன. சங்கராபரணம், தர்பார் ராகங்களை நல்ல வடிவங்களாய்ச் சித்திரித்தார். 'சவரு' கிருதியில் நிரவல் ஸ்வரப்ரஸ்தாரங்கள் தரமா யிருந்தன.

அன்று மாலையில் நடந்த ருக்மிணி ராஜகோபாலனின் கானம் மற்றொரு உயர்தர நிகழ்ச்சி. அது அரைமணி நேரத்துக்குள் குறுக்கப்பட்டதுதான் அதிருப்திக்கு இடம் கொடுத்தது. அனாயாசமான உதவுபடியுடன், தோடி ராகம் கற்பனைப் பெருமையும் கார்வையழகும் கொண்டு விரிவாக வெளிவந்தது. ஹம்ஸத்வனி கிருதியின் நிரவல் ஸ்வரங்கள் ராகபாவம் நிறைந்திருந்தன.

• • •

டில்லியிலிருந்து 15உ கேட்ட கே. ராஜலக்ஷ்மியின் கானம் கவனத்தை யிழுத்தது. மதுரமான குரலில் பைரவி ராகத்தையும், சிந்துராமக்ரியா, மணிரங்கு உருப்படிகளையும் தரமாய்க் கையாண்டார்.

18உ சென்னையில் பாடிய வி. அனந்தராமனின் காம்போதி ராகமும் 'நீலாயதாக்ஷி' என்ற பரககிருதியும் ஒழுங்காயிருந்தன.

அன்று அதே நிலையத்திலிருந்து கேட்ட கே. கோமதி தேவியின் கானம் சிராவியமாயிருந்தது. பைரவி, பந்துவராளி ராகங்களும் 'லலிதே ஸ்ரீ' உருப்படியின் நிரவல் ஸ்வரங்களும் அவரது தேர்ச்சியை எடுத்துக் காட்டின.

19உ சென்னையில் மாயவரம் பி. ஸரஸ்வதியின் கானம் பிருவாயிருந்தது. ஸ்ரீரஞ்சனி, தோடி, கல்யாணி ராகங்களும், 'முன்னு ராவணு' உருப்படியும் தரமாயிருந்தன. ஆனால் ராக ஆலாபனைகளில் த, த, ததின என்பது போன்ற அக்ஷரங்களை வைத்துக்கொண்டு, 'தல-லல்லா' போன்ற சப்தங்களை நீக்கிக் கொள்ளலாம்.

21உ சென்னையில் ஏ. கே. சரோஜினி, திருச்சியில் ஏ. பாலசுப்பிரமணியன் இவர்களின் கானங்கள் குறிப்பிடத் தக்கவை. முன்னவரின் ஜயந்தஸ்ரீ ஆலாபனை சிறப்பாயிருந்தது.


பின்னவருக்குக் கனிப்பும் நயமுங்கொண்ட சாரீரம், நல்வழி. ஹரிகாம்போதி, ஹிந்தோளம், ஹம்ஸாநந்தி ராகங்கள் தெளி

★

"என்ன ஐயா! கோடாலியும், கம்புமாக எங்கே கிளம்பி விட்டீர்? எங்கேயாவது கலாட்டாவா என்ன?"

"அதெல்லாம் ஒன்று மில்லைங்காணும்; சமாதான மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கப் போகிறேன்."

★



வான நல்வடிவங்களாயிலங்கின. 'தேதெந்து வேதகுதுரா' கிருதியின் ஸ்வரப்ரஸ்தாரம் ஜோராயிருந்தது.

• • •

செம்பை வைத்யநாதய்யரின் முழுநேரக் கச்சேரி, 4ஆ திருச்சி நிகழ்ச்சியாகக் குறிப்பிட்டிருந்த போதிலும், சென்னை நிலயத்திலேயே நடந்ததாகப் பக்க வாத்ய அறிவிப்பு மூலம் நன்கு தெரிந்தது. அவரது கணீர்ப் பான சாரீரத்துக் கேற்ப கானமும் கணீரமாயிருந்தது. சங்கராபரணத்தைச் சாங்கோபாங்கமாய் வழங்கினார். கேதாரகௌளையிலும், இறுதி ராகமாலிகையிலும் அமோகமாய் பிர்க்காவைக் கொட்டினார். 'எந்துகு பெத்தல' என்ற பழம் பெரும் கிருதியில், அதிவேககால வேலைப்பாடுகளை யெல்லாம் காட்டினார்.

5ஆ இரவு, சென்னை நிலயத்திலிருந்து கேட்ட ஒரு கானம் அபூர்வ பாணி எழில் கொண்டிருந்தது. கணிப்பும், வெகு சரளமான உதவுபடியும் கொண்ட குரல்; தெளிவான பிர்க்காப் பொழிவு; கற்பனை நிறைந்த ஸ்தாயி சஞ்சாரங்களின் கோவை யழகு; இவை யெல்லாம் ஒருங்கே சேர்ந்து, தனி பாணியுடன் சரமாரியாய்ப் பொழிந்து வந்தன. கானடா, ஹம்ஸாநந்தி ராகங்கள் கேட்டோரை வியக்க வைத்தன. 'கலியெல்லவோரா' கிருதியில் அமோகமாய் விழுந்த ஸ்வரப்ரஸ்தாரங்கள் பாடகரின் ஞானச் சிறப்பையும், சாதக எழிலையும் நன்கு எடுத்துக் காட்டின. பாடியவர் சேலம் துரைஸாமி அய்யங்காரின் குமாரர், டி. செல்லமய்யங்கார்.

• • •

நவம்பர் 1ஆ சென்னையில் பாடிய எஸ். பி. ஹம்ஸதமயந்தி, குரல் வளப்பும் சிறந்த தேர்ச்சியும் கொண்டவர். நாட்டக் குறிஞ்சி, கல்யாணி, இவற்றோடு கடைசியில் கேட்ட ராகமாலிகையும் மனதைக்கவர்ந்தன.

2ஆ சென்னையில் வி. என். ராஜலக்ஷ்மி இனிய குரலில் ஆனந்த பைரவி, சங்கராபரணம், ராகங்களை மதுரமாய் இழைத்துப் பாடினார்.

3ஆ சென்னையில் பாடிய திருவாடி வி. வி. ராமச்சந்திரனின் கானம் நமது கவனத்தைக் கவர்ந்தது. அவரது கரஹரப்ரியாவும், கல்யாணியும் மிகவும் தரமாயிருந்தன.

★ ★ ★

அவருக்குத் தெரியுமா?

ராதாகிருஷ்ணன்

நாமைபூத்துத் தளவாய்ச் செட்டியார் என்றால் எழு வயது பையன் முதல் எழுபது வயது கிழவன் வரை தெரியாதவர் ஒருவருமே கிடையாது. காரணம், அவ்வூரில் உள்ள பெரிய எண்ணெய்க் கடை அவருடையது.

ஒருநாள் செட்டியார் ஊரில் இல்லாத சமயம் அவர் மனைவிக்கு அவசரமாக ஒரு வீசை நல்லெண்ணெய் வேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் வீட்டில் வேலைக்காரன் ஒருவரும் கிடையாது. ஆகவே பக்கத்து வீட்டில் புதிதாக வந்த வேலைக்காரனை அழைத்து அவனிடம் பத்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்து ஒரு வீசை நல்லெண்ணெய் வாங்கி வரும்படி அனுப்பினாள்.

அரை மணி நேரத்தில் வேலைக்காரன் ஒரு வீசை நல்லெண்ணெயும், பாக்கி ஐந்தரை ரூபாயையும் கொண்டுவந்து செட்டியார் மனைவியிடம் கொடுத்தான்.

மீதிப் பணத்தைப் பார்த்ததும் செட்டியார் மனைவிக்கு இருதயத்துடிப்பு அப்படியே நின்றுவிடும் போலிருந்தது.

"ஒரு வீசை நல்லெண்ணெய் நாலரை ரூபாயா?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

"ஆமாங்க! நான் பொய்யா சொல்றேன்? எல்லாக் கடையிலேயும் இல்லேன்னுட்டானுங்க! எதிர்த்த தெருக்கோடியிலே ஒரு திருப்பம் இருக்குது பாருங்க. அங்கே ஒரு கடையிருக்குதுங்களே, அங்கேதான் கொடுத்தானுங்க?" என்றான் வேலைக்காரன்.

"அடேயப்பா! முழுப் பூசனிக்காயை சோத்திலே மறைக்கிறியே! மீதிக் காசைக் கீழே வைக்கிறியா, இல்லாட்டா போலீஸிலே எழுதி வைக்கட்டுமா?" என்று இரைந்தாள்.

"நான் பணத்துக்கு எங்கே போறதுங்க?" என்றான் அவன் பரிதாபமாக.

செட்டியாரின் மனைவி கேட்கவில்லை. கூச்சலிட்டு அவனைத் திட்ட ஆரம்பித்து விட்டாள்.

"என்ன கூச்சல்?" என்று கேட்டுக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தார் அப்பொழுதுதான் ஊரிலிருந்து திரும்பி வந்த செட்டியார்.

செட்டியாரின் மனைவி சங்கதியைச் சொல்லி முடித்தாளோ இல்லையோ, "என்டா, திருட்டுப் பயலே! எந்தப் பாவிப் பயல் உனக்கு ஒரு வீசை நல்லெண்ணெய் நாலரை ரூபாய் என்று கொடுத்தான்? இந்தத் தளவாய்ச் செட்டியாரிடமா உன் கைவரிசையைக் காட்டுறெய்?" என்று துள்ளிக்குதித்தார் செட்டியார்.

"அட, பாவி! நீ நாசமாய்ப் போக!" என்று ஆசீர்வாதம் செய்தாள் அவர் மனைவி.

"கொஞ்சம் இரு. நீ தானாக விஷயத்தைக் கக்காவிட்டால் போலீஸ் தடி உன்னைக் கக்கவைத்து விடும்படி செய்கிறேன்!" என்று அவனை அழைத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குக் கிளம்பினார் செட்டியார்.

வேலைக்காரன் பாடு திண்டாட்டமாய்ப் போய் விட்டது. வழியில் அவன்தான் எண்ணெய் வாங்கிக் கொண்டுவந்த கடையைக் கண்டதும், "சாமி! இதெல்லாம் என்னத்துக்குங்க? நான் வாங்கின கடை இதுதானுங்க! நீங்களே நேரில் விசாரிச்சுக்குங்க!" என்றான்.

வேறு ஏதோ யோசனையாயிருந்த செட்டியார் தலை நிமிர்ந்து பார்த்ததும் ஒரு கணம் அப்படியே ஸ்தம்பித்து விட்டார்.

வேலைக்காரன் தம்முடைய கடையிலிருந்துதான் நல்லெண்ணெய் வாங்கி வந்தான் என்பதை அவர் முன்னாலேயே கண்டாரா!

காலக்ஷேபப் பரிசு: சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: "கப்பு" ட்ரெயினிங் ஸ்கூல், திருப்பாப்புலியூர்.

விடுதலை

விந்தன்



பாதுஷா வில்லாவின் பிறந்த நாளை முன்னிட்டு, அன்று ஆப்கானிஸ்தானமே ஒரே கோலாகலமாகக் காட்சியளித்தது. தங்களுடைய அன்பையும் ஆசீர்வாதத்தையும் பாதுஷாவிடம் தெரிவித்துக் கொள்வதற்காக மந்திரிப் பிரதானிகள், சேனாபதிகள், ஜாகீர்தார்கள், கலைஞர்கள், கவிஞர்கள் எல்லோரும் அன்று ராஜ சபையில் பிரசன்னமாயிருந்தனர். ராணி ஜிஜியாவுடன் வில்லாவும் வந்து சிம்மாசனத்தில் அமர்ந்து விட்டான். கவி இஸாவை மட்டும் அதுவரை காணவில்லை.

பாதுஷாவின் புருவங்கள் சற்றே நெரிந்தன. அதே சமயத்தில் கவி இஸா ராஜ சபைக்குள் பிரவேசித்தான். என்றுமில்லாதபடி அன்று ஒரு மானும் அவனைப் பின் தொடர்ந்து வந்தது. சின்னஞ் சிறு குட்டி முதல் கட்டி வளர்க்காத அந்த மானை—பலாத்காரத்தின் துணை அணுவளவுமின்றி அன்பின் துணை ஒன்றையே பிரதானமாகக் கொண்டு அன்று வரை வளர்த்து வந்த 'அல்லா' என்ற அந்த அருமை மானை — அன்றுதான் முதன் முதலாக அரண்மனைக்குத் தன்னுடன் அழைத்துக் கொண்டு வந்திருந்தான் இஸா.

அந்த மானைக் கண்ட மாத்திரத்தில் தன் மனதை அதனிடம் பறிகொடுத்து விட்டாள் ராணி ஜிஜியா. அவ்வளவுதான்; அவளுடைய அதரங்கள் ஒரு கணம் அரசனின் காதருகே சென்று ஏதோ முணுமுணுத்தன; அடுத்த கணம் பாதுஷாவின் முகத்தில் ஓர் அலட்சியப் புன்னகை மின்னி மறைந்தது.

இந்தக் காட்சியைக் கண்டதும் இஸாவுக்கு விஷயம் ஒருவாறு புரிந்துவிட்டது. அரசனாயிருக்கட்டும், அல்லது அவன் வேறு யாராகவாவது இருக்கட்டும் — அதிகாரத் திமிரையும், செல்வச் செருக்கையும் துணையாகக் கொண்டு, உலகத்தில் சகல விதமான காரியத்தையும் சாதித்துக் கொள்ளப் பார்க்கும் அக்கிரமம் இஸாவுக்கு எப்பொழுதுமே பிடிப்பதில்லை. ஆகவே, ராணி ஜிஜியாவின் ஆக்கிரமிக்கும் ஆசையும், பாதுஷாவின் அலட்சியப் புன்னகையும் அவனுக்கு அடக்க முடியாத ஆத்திரத்தை யளித்தன.

அவன் எதிர்பார்த்தபடியே, அடுத்த கணம் "இஸா......!" என்று அவனை அலட்சியமாக அழைத்தான் பாதுஷா. அப்பொழுது, அவனுடைய வலது கண்ணும் வலது பக்கத்து மீசையும் சற்றே உயர்ந்து தாழ்ந்தன.

தன் உள்ளத்தில் பொங்கிவந்த உணர்ச்சிகளையெல்லாம் ஒருவாறு அடக்கிக் கொண்டு, "ஷாஹான்ஷா!" என்று தன் ஆசனத்தை விட்டு எழுந்து வந்து சம்பிரதாயப்படி அரசனின் முன்னால் நின்றான் கவி.

"உன்னுடைய மானிடம்......" என்று பாதுஷா, தான் சொல்ல வந்ததை முடிக்கு முன்னரே, "என்னுடைய மான் இல்லை, மகராஜ்! அல்லாவினுடையது!" என்று அடித்துச் சொன்னான் கவி.

"தெரியும்; ஜிஜியா அந்த மானிடம் தன் மனதைப் பறி கொடுத்து விட்டாள்......"

"இருக்கலாம்; ஆனால் அந்த மானும் தன் மனதை ராணியிடம் பறி கொடுக்க வேண்டுமே!" என்றான் கவி.



வதற்கு முன்னால் அந்த மானின் கழுத்தில் விலங்கிடுவது யாராலும் முடியாத காரியம், பாதுஷா!'' என்றான்.

வில்லாவின் கண்களில் தீப்பொறி பறந்தது. ''என்ன, என்னால் கூடவா முடியாது!'' என்றான் ஆச்சரியத்துடனும் அவமானத்துடனும்.

''என்னைப் பொறுத்த வரையில் எல்லோரையும் சமமாகத்தான் பாவிக்கிறேன், பாதுஷா!'' என்றான் இலா.

''கடைசி தடவையாகக் கேட்கிறேன்; என்னுடைய கோபத்துக்கு ஆளாக வேண்டாம்...''

''அல்லாவின் கோபத்தைத் தவிர வேறு யாருடைய கோபத்துக்கும் நான் அஞ்சுவதில்லை!''

கவியின் அஞ்சா நெஞ்சம் அரசனின் அதிகாரத்தை இமைக்கும் கூட ஓர் அசக்கு அசக்கிவிட்டது. ''வேறு வழி?'' என்று கேட்டுக்கொண்டே அவன் இலாவை ஏற இறங்கப் பார்த்தான்.

''வேண்டுமானால் அதை, 'அரே அல்லா, வா!' என்று ராணியைக் கூப்பிடச் சொல்லுங்கள்; வந்தால் நான் அதைத் தடுக்க மாட்டேன்!'' என்றான் இலா.

பாதுஷாவின் கண்கள் 'ஜிவ்'வென்று சிவந்தன. அவன் கலகலவென்று பயங்கரமாகச் சிரித்தான். ராஜ சபையில் பிரசன்னமாயிருந்தவர்களின் விழிகளெல்லாம் பிரண்டு விழித்தன.

''என்ன சொல்கிறாய்! ஜிஜியா அந்த மானை அடைய வேண்டுமென்றால் அவளிடம் அது தன் மனதைப் பறிகொடுக்க வேண்டுமோ? — பேஷ், நன்றாயிருக்கிறது! — கழுத்தில் விலங்கைப் போட்டால் தானே மனதைப் பறிகொடுத்துவிட்டுப் போகிறது!''

அவ்வளவுதான்: அரசனின் முன்னால் கவி தன் இரு கரங்களையும் அலட்சியமாக நீட்டி, ''இந்தக் கைகளில் விலங்கிடு

பாதுஷா, ராணியின் முகத்தைப் பார்த்தான். அவளும் குறிப்பறிந்து, 'அரே அல்லா, வா!' என்று அந்த மானை அன்புடன் அழைத்தான்.

அதுவரை தன் இரு நீண்ட காதுகளையும் உயர்த்தி வளைத்து, அவன் சொல்வதைத் தன் அகன்ற விழிகளால் கவனித்துக் கொண்டிருந்த 'அல்லா' உடனே கவி இலாவுக்குப் பின்னால் சென்று மறைந்து கொண்டது. முகத்தில் புன்னகை தவழ, அந்த மானை அன்புடன் தூக்கி மார்புடன் அணைத்துக் கொண்டான் கவி.

அன்பால் பிணைக்கப் பட்டிருந்த அந்த இரு ஜீவன்களுக்கு முன்னால் அரசனின்

ஆணவமும் கொஞ்சம் ஒடுங்கிற்று. "ஆயிரம் மோகராக்கள் தருகிறேன்; மானைக்கொடுத்துவிடு!" என்றான்.

"அந்த மோகராக்களும் உமக்குச் சொந்தமில்லை; இந்த மானும் எனக்குச் சொந்த மில்லை. உலகத்தில் இருக்கும் எல்லாப் பொருளுமே உண்மையில் அல்லாவினுடையவை யல்லவா? அவற்றில் எதையாவது விற்கவோ வாங்கவோ நமக்கு என்ன உரிமை யிருக்கிறது?" என்று கேட்டான் கவி இஸா.

பாதுஷா பொறுமை யிழந்தான். "என்ன உளறுகிறாய்? நான் யார் என்று தெரியவில்லையா?" என்று அனலைக் கக்கினான்.

"தெரியாமலென்ன ......!"

"தெரிந்தால் உடனே மானைக் கொடுத்துவிடு; மன்னித்து விடுகிறேன்!"

"என்னை மன்னிக்கக் கூடியவர் ஒரே ஒருவர்தான் உண்டு; அவர்தான் அல்லா!" என்றான் கவி, அரண்மனையின் முகட்டை நோக்கி.

"ஹா!" என்றான் பாதுஷா. அவன் கை உடைவாளை உருவ விரைந்தது. அதற்குள் என்ன நினைத்தானோ என்னமோ, "இவனைக் கொண்டுபோய்ச் சிறையில் தள்ளுங்கள்!" என்றான்.

அடுத்த கணமே அவனுடைய ஆக்ஞை நிறைவேற்றி வைக்கப்பட்டது.

★

இருள் கவிந்த சிறையிலே, காலைக் கதிரவனையும் மாலை மதியையும், பனி மூடிய மலைத் தொடர்களையும் மலர் நிறைந்த சோலைகளையும், வானளாவிய மரங்களையும் வானம்பாடிக் குருவிகளையும் கவி இஸா காண முடியுமா?— அவற்றை யெல்லாம் காணாமல் அவன் கவி இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. ஆனாலும் சிறையின் ஜன்னல் வழியே பார்க்க முடிந்த அவனுடைய அருமை மான், அன்பைக் கவர்ந்த மான், அரண்மனை உத்தியான வனத்தில் கழுத்தில் விலங்கிடப்பட்டுக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த மான் — அயர்ச்சி அடைந்திருந்த அவன் உள்ளத்துக்கு ஓரளவு உணர்ச்சி யூட்டிற்று.

"அரே, அல்லா!" என்று சிறையிலிருந்தபடியே அந்த மானை அன்புடன் கூவியழைப்பான் இஸா. அது இழுத்துப் பறித்துக்கொண்டு எப்படியாவது அவனை அடைந்துவிடத் துடியாய்த் துடிக்கும். ஆனால், அதன் பலன்? — இரும்புச் சங்கிலி இறுகி இறுகி அதன் கழுத்தில் செக்கச் செவேரென்று இரத்தம் கசியச் செய்துவிடும். அந்தக் காட்சியைக் கண்டதும் கவியின் உள்ளம் பதை பதைக்கும்; நெஞ்சு நெக்குருகிக் கண்ணீர் கசிந்து விடும். ஒரு கையால் தன் கண்ணை மூடிக்கொண்டு, இன்னொரு கையால் "வேண்டாம் அல்லா, வேண்டாம்!" என்று இரைந்தபடி சமிக்ஞை காட்டி அதை வேண்டிக்கொள்வான் இஸா.

'அல்லா'வோ அவனை 'வா, வா!' என்று அழைப்பது போல் மருண்டு நோக்கித் தன் முன் கால்கள் இரண்டையும் தூக்கித் தூக்கி நிற்கும்.

"பொறு அல்லா, பொறு! காலம் மாறும்!" என்பான் கவி.

'அல்லா'வைப் பிரிந்ததிலிருந்து அவனுக்கு உணவு செல்லவில்லை; உறக்கம் கொள்ளவில்லை. அவனைப் பிரிந்ததிலிருந்து 'அல்லா'வும் அதே நிலைமையில்தா னிருந்தது.

★

ராணி ஜிஜியாவோ 'அல்லா'வின் அன்பைப் பெறுவதற்கு என்ன வெல்லாமோ செய்து பார்த்தாள். அடிக்கடி அதன் முதுகை அன்புடன் தடவிக் கொடுக்க யத்தனிப்பாள். அதற்கு இடங் கொடுக்காமல் 'அல்லா' இப்படியும் அப்படியுமாகத் துள்ளித் துள்ளி ஓடி, அவளை அலக்கழிக்கும்.

வேளைக்கு வேளை விதம் விதமான இரைகளை எடுத்துக் கொண்டு ஜிஜியாவின் தோழிகள் 'அல்லா'விடம் வருவார்கள். அவற்றை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை 'அல்லா.' தோழிகள் மனமுடைந்து போய் விஷயத்தை ராணியிடம் தெரிவிப்பார்கள். அவளே நேரில் வருவாள். என்னவெல்லாமோ கொஞ்சிக் குலாவி ஒரு பிடி புல்லையாவது அதன் வாயில் திணித்துவிடப் பார்ப்பாள். 'அல்லா'வோ தன்னால் முடிந்த வரை வாயை இறுக மூடிக் கொண்டு தலையைத் திருப்பிக் கொள்ளும். இதனால் ராணி ஜிஜியா அடைந்த வேதனை கொஞ்ச நஞ்சமன்று. ஆனாலும் அந்தப் பாழும் ஆசை மட்டும் அவளை விடவேயில்லை.

இந்தக் காட்சிகளை யெல்லாம் காராக்கிரகத்தின் ஜன்னல் மூலம் ஒருவாறு காணும் பாக்கியம் பெற்றிருந்த இஸா, ஒரு பக்கம் இன்பமும் இன்னொரு பக்கம் துன்பமும் அடைவான்.

இதயத்தோடு இதயம் ஒன்றிப்போயிருந்த இரு ஜீவன்களும் எத்தனையோ

காட்களை இப்படியே உணவின்றி உறக்கமின்றிக் கழித்துவிட்டனர். ஆனால், பாதுஷா.........?

அந்த இரு ஜீவன்களுக்குமிடையே இருக்கும் அன்பைத் தன் அதிகாரத் திமிரால், ஆயிரம் மோகராக்களால் பெற முடியாவிட்டாலும், சிறைப்படுத்திச் சித்திரவதை செய்வதன் மூலம் பெற்றுவிட முடியுமென்று நினைத்தான்!

இவர்களுக்கு மத்தியில் என்றைக்காவது ஒரு நாள் 'அல்லா'வின் உள்ளத்தில் தனக்கும் இடம் கிடைக்குமென்று எண்ணிப் பொறுமையுடன் நாளைக் கழித்து வந்தாள் ஜிஜியா.

★

அன்று காலை வழக்கம்போல் நமாஸ் செய்துவிட்டு ஜன்னலருகே வந்து நின்று 'அல்லா'வை நோக்கினான் இஸா. எந்த நேரமும் நிமிர்ந்து நின்று இஸாவின் வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் 'அல்லா', அன்று ஏனோ தரையில் சோர்ந்து விழுந்து கிடந்தது!

கவி இஸா, "அரே, அல்லா! அரே, அல்லா!" என்று கதறினான்.

அவனுடைய கதறல் அந்த மானின் காதில் விழுவதற்கு அதனுடைய உடம்பில் உயிர் இருந்தால்தானே!

'அல்லா', தன் உயிரை அன்புக்கு அர்ப்பணம் செய்துவிட்டதை அறியாத இஸா மேலும் மேலும், "அரே அல்லா, அரே அல்லா!" என்று கதறிக் கொண்டேயிருந்தான்.

அதே சமயத்தில், தன் தோழிகளின் மூலம் செய்தி கேட்ட ராணி ஜிஜியா, அங்கே ஓடோடியும் வந்தாள். 'அல்லா'வை இப்படியும் அப்படியுமாகப் புரட்டிப் பார்த்துவிட்டு, அவள் அழுது கொண்டே சிறையின் ஜன்னலை நோக்கினாள்.

இஸாவுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

அவன் வானத்தை நோக்கித் தன் இரு கையையும் ஏந்தி, "அரே அல்லா ஹுதஆலா! 'அல்லா'வை உன் திருவடிக்கு அழைத்துக் கொண்டு விட்டாயா?" என்று கேட்டு விட்டுக் கண்ணீர் மல்கிய கண்களுடன் சிறையின் வாயிலை நோக்கித் திரும்பினான்.

என்ன விந்தை இது! 'கடக்'கென்று பூட்டுத் திறக்கும் சத்தமும் 'லொடக்'கென்று நாதாங்கி கழன்று விழும் சத்தமும் அவன் காதில் விழுந்தன.

அடுத்த கணம் 'படார், படார்' என்று சிறைக் கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த பாதுஷா, இஸாவின் முன்னால் மண்டியிட்டு அவன் இரு கைகளையும் பற்றி, "என்னை மன்னித்து விடு, இஸா!" என்று வேண்டிக் கொண்டான்.

"மாட்டார்; அல்லா ஹுதஆலா உம்மை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்!" என்று சொல்லி, அவன் பிடியிலிருந்து விலகிக்கொண்ட இஸா, "அரே, அல்லா! இதோ, நானும் உன்னுடன் வந்துவிட்டேன்! அரே, அல்லா! இதோ, நானும் உன்னுடன் வந்துவிட்டேன்!" என்று ஆவேசத்துடன் இரைந்து கொண்டே, சிறை வாயிலை விட்டுச் சிட்டுக் குருவிபோல் பறந்து சென்றான்!

அரண்மனை நெடுகிலும் நின்று காவல் புரிந்த ஆயுதபாணிகளான வீரர்கள் யாரும் அவனை ஏனோ தடுக்கவில்லை!

★ ○ ★


லைப்பாய்
பழக்கத்தையும் அவன்
அறிந்திருக்கிறான்
அவன் ஸ்கூலுக்குப் போகிறான். அங்கிருந்து என்ன கொண்டு வருவான்? புதிய அறிவு, புதிய முறைகள்—சில தொத்து வியாதிக் கிருமிகளுங்கூட! அவனுக்குக் கற்றுக் கொடுத்த எல்லாப் பாதுகாப்புகளுடனும் தாயார் தன் மகனை அனுப்புகிறாள். ஆரோக்கியமுள்ளவனையும் பீடிக்கக் கூடிய அழுக்கு அபாயத்திலிருந்து காப்பாற்ற லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிப்பதே அவற்றுள் முக்கியமானது.
LIFEBUOY
SOAP
லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.
அது ஒரு நல்ல பழக்கம்.

மாயாஜாலக் குரங்கார்

ஜெயபால்

காட்டில் அன்று ஒரே பரபரப்பு. காரணம்: மாயாஜால மந்திரவாதி குரங்கார் அந்தக் காட்டுக்கு விஜயம் செய்திருந்ததுதான். அவர் பல மாய வித்தைகள் செய்து காட்டி, காட்டு மிருகங்களை யெல்லாம் ஒரே வியப்புக் கடலில் ஆழ்த்தினர்.

எல்லாவற்றையும் விட கடைசி வித்தைதான் ரொம்ப ரொம்ப நன்றா யிருந்தது. அது என்ன வென்றால், அழகான பெட்டி ஒன்றை அவர் மேடைமீது வைத்து விடுவார். அது காலிப்பெட்டி என்று எல்லோருக்கும் திறந்து காட்டுவார். பிறகு ஒன்று, இரண்டு, மூன்று என்பார். அவ்வளவுதான்; உடனே கறுப்புத் துணியால் பெட்டியை மூடிவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டு ஏதோ ஜபம் செய்வார். அடுத்த நிமிஷம் அந்தப் பெட்டி, தவளையைப் போல் குதித்துக் குதித்து ஓடும்!

இந்த அற்புதமான வித்தையைப் பற்றிக் கேள்விப்பட்ட சிங்கராஜனின் குழந்தைகள், தாங்களும் அந்த வித்தையைப் பார்க்கவேண்டும் என்று தங்கள் அப்பாவை நச்சரித்தன. தொந்தரவு பொறுக்க முடியாமல் சிங்கராஜன் அந்த மாயாஜாலக் குரங்காரைத் தம் அரண்மனைக்கு வரவழைத்தார். வேடிக்கை காட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு விட்டன. மந்திரவாதி குரங்காரும் தம்முடைய வித்தைகளைச் செய்து காட்ட ஆரம்பித்தார்.

அன்று யானையார் முதல் எறும்பார் வரை அரண்மனையில் கூடி, மந்திரவாதி குரங்காரின் மாயாஜால வித்தைகளை வெகுவாக அனுபவித்துக் கொண்டிருந்தனர். ஆனால் மந்திரி நரியாருக்கு மட்டும், "இதில் ஏதோ சூது இருக்க வேண்டும், பெட்டி யாவது, ஓடுவாவது!" என்று தோன்றிற்று. ஆகவே, அவர் சிறிது நேரம் யோசித்தார். பிறகு, தம் சிநேகிதரான போலீஸ் பூனையாரின் காதோடு காதாக ஏதோ கூறினர்.

எல்லா வேடிக்கைகளும் செய்து காட்டிய பின்னர், கடைசியாக அந்தப் பெட்டி குதித்து ஓடும் காட்சி வந்தது. வழக்கம்போல் குரங்கார் பெட்டியை மேடைமீது வைத்துவிட்டு, அதைக் கறுப்புத் துணியால் மூடினர். பிறகு தம் கண்களை மூடிக்கொண்டு ஏதோ ஜபம் செய்தார். உடனே பெட்டியும் ஓட ஆரம்பித்தது. சிங்கராஜனின் குழந்தைகள் உள்படக் காட்டுப் பிரஜைகள் யாவரும் வாயில் ஈ நுழைவது கூடத் தெரியாமல் அந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தன.

திடீரென்று மேடையின்மேலிருந்து ஒரு பெரிய கல் வந்து அந்தப் பெட்டியின் மீது விழுந்தது. அவ்வளவுதான்; பெட்டி ஆயிரமாயிரம் சுக்கல்களாக உடைந்தது.

என்ன ஆச்சரியம்! அடுத்த நிமிஷம் அந்தப் பெட்டிக்குள்ளிருந்து தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென்று வெளியே ஓட்டோடியும் ஓடிவந்தார் ஓர் ஆமையார்!

காட்டுப் பிரஜைகள் யாவருக்கும் விஷயம் விளங்கிவிட்டது. "ஓஹோ! இதுதானா உன் மாயவித்தை! பெட்டிக்குள் ஆமையாரை விட்டு வைத்து எங்களை யெல்லாம் ஏமாற்றுவா பார்க்கிறாய்!" என்று கோபத்துடன் எல்லா மிருகங்களும் குரங்காரின் மீது பாய்ந்தன. ஆனால், குரங்கார் அடுத்த நிமிஷமே மாயமாய் மறைந்து விட்டார்!

பாவம், மந்திரி நரியார்தான் தம்முடைய சூட்டை வெளிப்படுத்தித் தம்மை அவமானமடையச் செய்தார் என்பது மாயாஜாலக் குரங்காருக்குத் தெரியவே தெரியாது!



யசோதரா

"நீ கேள்விப் பட்டதைத்தானே அப்பா சொல்லப்போகிறாய்! அதற்குப் பயப்படுவானேன்?" என்று தேற்றியவாறு கேட்டார் ஜமீன்தார்.

"எசமான், என் சொந்தக்காரர் சொன்னாருங்கோ, நம் சின்ன எசமான் நம் கிராமத்துப் பெண் சோனாவை இழுத்துக்கிட்டு ஓடிவிட்டாரில்லே, அந்தச் சமாசாரம் அவர்களுக்குத் தெரிந்துபோய் விட்டதாம். அதனால் அவர்களுக்குப் பிறந்த அந்தப் பெண்ணைத் தம் பிள்ளைக்குக் கட்டிக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்களாம்!" என்று சொல்லிவிட்டு, ஜமீன்தாரை மிகவும் பயத்துடன் நோக்கலானான் லட்சுமணன்.

இதைக் கேட்ட டாகுர் அர்ஜுன் சிங்கின் முகம் வெளிறிட்டது. அவர் 'ஹூம்' என்ற பெருமூச்சுடன் தலை குனிந்தார்.

"இன்னும் எவ்வளவோ அந்த ஊரிலே சொல்லிக் கொள்கிறாங்க. எனக்கு அவற்றையெல்லாம் சொல்லக்கூட நாக்கு கூசுகிறது!" என்று பயந்தவண்ணம் மறுபடியும் சொன்னான் லட்சுமணன்.

"இன்னும் என்ன சொல்லிக் கொள்கிறார்கள்?" என்று கேட்டார் ஜமீன்தார்.

"தன் தகப்பனுடன் பெண் ரொம்ப நாள் பிச்சை வாங்கிக்கொண்டு திரிந்தாளாம்!"

"எந்த மடையன் அப்படிச் சொன்னான்? என்னிடம் நேரில் சொல்லச் சொல்லு! நாக்கை அறுத்துக் கீழே வைத்து விடுகிறேன். நந்தராம், சோனாவை இழுத்துக் கொண்டு ஓடினான் என்பது உண்மைதான். ஆனால் சோனாவும் நம் ஜாதிப் பெண்தானே! அதிலே என்ன தப்பு? முறைப்படி அவளைக் கல்யாணம் செய்து கொண்டு குடித்தனம் நடத்தினானாக்கும்!" என்று உணர்ச்சியுடன் கூறினார் ஜமீன்தார்.

"எல்லாம் எங்களுக்குத் தெரியாதுங்களா?" என்றான் லட்சுமணன்.

"ஊரில் பிள்ளைகளுக்கு என்ன குறைச்சல்? அவர்கள் ஒன்றும் நம் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டாம்" என்று ஜமீன்தார் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது நந்தராம் அங்கே வந்தான். ஜமீன்தாரின் முகபாவத்தைப் பார்த்த அவன், "என்ன விசேஷம், அப்பா?" என்று கேட்டான்.

"சிதளபுரத்து ஜமீன்தாரிணி, தன் பிள்ளைக்கு ஜஸ்லோவைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்கிறாளாம்!"

"ஏன்?"

"பெண், தகப்பனுடன் பிச்சை வாங்கிக் கொண்டு திரிந்தாள் என்றும், திருட்டுத்தனமாக இழுத்துக்கொண்டுபோன சோனாவுக்குப் பிறந்தவள் என்றும் எவனோ கதை கட்டி விட்டானாம்!"

இதைக் கேட்ட நந்தராம் அப்படியே மலைத்து விட்டான்.


"வேண்டவே வேண்டாம். அவர்களுக்கு என் வீட்டுப் பெண்ணைக் கொடுக்க நானே தயாராயில்லை!" என்றார் ஜமீன்தார்.

நந்தராம் பேசாமல் அங்கிருந்து நகர்ந்து விட்டான். அன்று பூராவும் ஜமீன்தாருடைய வீட்டில் இதே பேச்சுத்தான். யசோதராவின் காதுக்கும் இந்த விஷயம் எப்படியோ எட்டி விட்டது. அதைக் கேட்ட அவளுக்கு வருத்தமும் மகிழ்ச்சியும் ஒருங்கே ஏற்பட்டது. கல்யாணம் நின்ற விஷயத்தில் அவளுக்கு மகிழ்ச்சியே. ஆனால் ஜமீன்தாரிணி, தான் இழுத்துக் கொண்டுபோனவளுக்குப் பிறந்தவள் என்ற காரணத்திற்காகச் சம்பந்தம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொல்லித் தன் குடும்பத்தாரையே அவமானப் படுத்தி விட்டாளே என்ற விஷயத்தில் மட்டும் அவளுக்கு மிகவும் வருத்தம்.

எல்லாரையும்விட அதிகம் வருந்தியது சுந்தரம்தான். அவன் தன் அறையினுள் உட்கார்ந்து கொண்டு, "நான் செய்த பாவங்களின் பலனை ஜல்ஸோவா அனுபவிக்கவேண்டும்? எங்கே கல்யாணப் பேச்சு நடந்தாலும் இந்தச் செய்தி போகாமல் இராதே! இந்தச் செய்தியைக் கேட்ட பின் எவன் ஜல்ஸோவைக் கல்யாணம் செய்து கொள்ள முன் வருவான்? நான் செய்த பாவங்களுக்காக என் பெண் ஜல்ஸோ கல்யாணமாகாமலே இருக்க வேண்டி வருமோ?" என்று வருத்தத்துடன் சிந்திக்கலானான்.

இந்த விஷயத்தைப் பற்றிய எண்ணமே இதுவரை சுந்தரமுக்கு ஏற்படவில்லை. இன்றுதான் இது இவ்வளவு தூரம் எட்டியிருக்கிறது என்பதை உணர்ந்தான். அவன் செவிகளில், "சுந்தரம், பார்த்தாயா? உன் பாபங்களுக்குப் பிராயச்சித்தம் ஆரம்பமாகி விட்டது. நீ உயிருக்கு உயிராக நேசிக்கும் உன் பெண்ணை உலகம் எப்படி ஒதுக்கித் தள்ளுகிறது என்று பார்! நீ சுகமாக வைக்க விரும்பும் உன் பெண் துக்க சாகரத்தில் மூழ்கித் தவிக்கப் போகிறாள், தெரிகிறதா?" என்று யாரோ ஏசுவது போல ஒலித்தது.

சுந்தரம், "நானா பாவம் செய்தேன்? என்ன பாவம் செய்தேன்? இல்லை, இல்லவே இல்லை, நான் பாவமே செய்ய



வில்லை!" என்று தனக்குள் சற்று உரக்கவே கத்திக் கொண்டான்.

மறுபடியும் அவன் காதுகளில், "நீ உன் இச்சைப்படி காரியங்களை நடத்தி ஜோனுவின் தாய் தந்தையருக்கு எவ்வளவு சிரமம் கொடுத்தாய், தெரியுமா? உன்னைப் பிரிந்த உன் தாய் தந்தையர் எவ்வளவு வேதனையுற்றனர், தெரியுமா? இதற்கெல்லாம் மூல காரணம் நீதான், சுந்தரம்! இவையெல்லாம் நீ செய்த பாவமில்லையா? உன் பெண்ணை இந்த நிலைக்குக் கொண்டு வந்தவனும் நீயே! நீ குற்றவாளிதான்!" என்று ஒலித்தது.

"நான் பாவம் செய்தேன் என்பதை ஒத்துக் கொள்கிறேன்; ஆனால் அதற்கான தண்டனை எனக்குத்தானே கிடைக்க வேண்டும்? நிரபராதியான ஜல்லோவுக்கு ஏன் அந்தத் தண்டனை? வேண்டாம், இது அநியாயம்: அநீதி; கொடுமை!" என்று சுந்தரமும் பதிலுக்கு உரக்கக் கத்தினான்.

26

சில தினங்களுக்குப் பின்னர் டாகுர் அர்ஜுன் சிங்குக்கு ராமநாத பாபுவின் திருமண அழைப்பிதழ் கிடைத்தது. அத்துடன் ஷியாமநாத பாபு எழுதியிருந்த கடிதமும் இருந்தது. அதில் எல்லாரும் கட்டாயம் வரவேண்டுமென்று அவர் வேண்டிக் கொண்டிருந்தார். டாகுர் சுந்தரத்தைக் கூப்பிட்டு, "நீயும் ஜல்லோவும் மட்டும் போய் வாருங்கள், போதும்" என்றார். சுந்தரம் 'சரி' என்று கூறிவிட்டுத் தன் தாயாரிடம் போய், "அம்மா, ராமநாத பாபுவுக்குக் கல்யாணமாம். கடிதம் வந்திருக்கிறது. நீயும் வருகிறாயா?" என்று கேட்டான்.

"வரலாம், ஆசையாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் எனக்குத்தான் கண் சரியாகத் தெரியவில்லையே! நான் எப்படி வருகிறது?"

"அப்படியானால் நீ வரப்போகிறதில்லையா?"

"இல்லை...... அவருக்கு எப்பொழுது கல்யாணம்? நீ என்றைக்குப் புறப்படப் போகிறாய்?"

"நாலைந்து நாளில் புறப்படலாம் என்று இருக்கிறேன்."

"கல்யாணத்துக்கு ஏதாவது செய்ய வேண்டுமோ, இல்லையோ? அதற்காகத்தான் கேட்டேன்" என்றாள் ஜமீன்தாரிணி.

ராமநாத பாபுவுக்குக் கல்யாணம் ஆகப் போகிறது என்ற செய்தியைக் கேட்டதும் யசோதராவுக்கு மனதை என்னவோ செய்தது. இவ்வளவு சீக்கிரத்தில் அவர் வேறு ஒருத்தியை மணந்து கொள்ள முன் வந்து விடுவார் என்று அவள் கொஞ்சங் கூட எதிர்பார்க்க வில்லை. தன்னைத் தவிர வேறு யாரையும் ராமநாதபாபு மணந்து கொள்ள மாட்டார் என்ற நம்பிக்கை அவளுடைய மனதில் வேரூன்றி யிருந்தது. அந்த நம்பிக்கையில் இப்போது ராமநாதபாபு மண்ணை வாரிப் போட்டு விட்டார்! ஆண்களுடைய காதல் எல்லாம் இப்படித்தானா? அவர்களுடைய சொற்களில் உண்மையே கிடையாதா? — என்றெல்லாம் அவள் எண்ணினாள்.

அன்று இரவு பூராவும் அவள் தூக்கமே இல்லை. அவருடைய கல்யாணத்திற்குத் தான் வரப்போவதில்லை என்று சொல்லி விடுவோமா? அப்படிச் சொன்னால் தாத்தா, பாட்டி, அப்பா முதலியவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வது?

இவ்வாறு எண்ணும்பொழுது அவளுடைய மனம், "நீ போய்விட்டுத்தான் வாயேன். அவர் எப்படிக் கல்யாணம் செய்து கொள்கிறார் என்று பார்க்க உனக்கு ஆசையா யில்லையா? உன்னிடம் எப்படிப் பழகுகிறார் என்பதையும், அவருக்கு மனைவியாக வாய்க்கப் போகிறவள் எப்படி இருக்கிறாள் என்பதையும் நீ தெரிந்து கொள்ள வேண்டாமா?" என்று தூண்டி விட்டது. கடைசியில் அவள் வெகு நேரம் தன் மனதுடன் போராடிய பிறகு, கட்டாயம் ராமநாதபாபுவின் கல்யாணத்திற்குப் போய் வருவதென்று முடிவு கட்டிக் கொண்டாள்.

* * *

ராமநாத பாபுவின் கல்யாணத்திற்கு இன்னும் நான்கு நாட்கள்தான் பாக்கி இருந்தன. வெளியூர்களிலிருந்து உற்றார் உறவினர் வந்து சேர்ந்த வண்ணம் இருந்தனர். அன்று விரஜகிசோர் வரப்போவதாக எழுதியிருந்தார். ராமநாதபாபு ஸ்டேஷனுக்கு வண்டி யனுப்பி விட்டு அவனுடன் அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். காலை மணி சும ருக்கு விரஜகிசோர் ராமநாத பாபுவின் அறையில் நுழைந்தார். "என்ன, இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டாயே! கல்யாண

எல்லாம் முடிந்த பிறகு ஒரேயடியாக வந்திருக்கக்கூடாதோ?" என்று கூறிய வண்ணம் அவரை வரவேற்றார் ராமநாத பாபு.

"முன்னாடியே வந்து விட வேண்டுமென்றுதான் நினைத்தேன். முடியவில்லை" என்றார் விரஜகிசோர்.

"என்னவோ, போ! உன்னையும் உன் கடிதத்தையும் எதிர்பார்த்துப் பார்த்துக் கண்தான் பூத்துப் போச்சு!"

"என்னையும் என் கடிதத்தையுமா! அடிமுட்டாள் அப்பா, நீ! இனிமேல் அவளையும் அவளுடைய கடிதத்தையும் அல்லவா நீ எதிர்பார்க்க வேண்டும்?" என்று பரிகாசம் செய்த வண்ணம் சட்டையைக் கழற்றி வைத்தார் விரஜகிசோர்.

"உனக்கு எப்பொழுது பரிகாசம் செய்வது, எப்பொழுது கூடாது என்பது தெரிவதே யில்லை, அப்பா!...அது கிடக்கட்டும். வா, சிற்றுண்டியை முடித்துக்கொண்டு வருவோம். உன்னிடம் எவ்வளவோ விஷயங்கள் பேசவேண்டும்" என்று கூறி விரஜகிசோரை அழைத்துக் கொண்டு உள்ளே போனார் ராமநாத பாபு.

விரஜகிசோரும் ராமநாத பாபுவும் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு சியாமநாத பாபுவைப் பார்க்கப் போயினர். சியாமநாத பாபு விரஜகிசோரைப் பார்த்ததும், "வா அப்பா, வா! வீட்டில் எல்லாரும் சௌக்கியந்தானே? அப்பா என்றைக்கு வரப் போகிறார்?" என்று கேட்டார்.

"அப்பா, நேரே கல்யாணத்திற்கு வந்து விடுவார். இங்கே வர அவருக்கு ஒழியவில்லை என்று சொல்லச் சொன்னார்" என்றார் விரஜகிசோர்.

"சரி, நீ வந்துவிட்டாய்; என் கவலை தீர்ந்தது. இனிமேல் கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் உன் கையில்தான்!" என்றார் சியாமநாத பாபு

27

அன்று இரவு ராமநாத பாபுவும் விரஜகிசோரும் ஒரே அறையில் படுத்துக் கொண்டனர்.

"என் விரஜகிசோர், கடைசியில் எனக்குக் கல்யாணம் செய்து வைத்தே விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு விட்டாயே!" என்று ஆரம்பித்தார் ராமநாதபாபு.

"ஆமாம்; நான் ஒன்றும் உனக்குக் கெடுதலைச் செய்யவில்லையே!"

"கெடுதலைச் செய்தாய் என்று நான் எப்பொழுது சொன்னேன்? ஆனால் நீ ஒன்றும் நல்லதையும் செய்து விடவில்லை!"

"என்ன!"

"பார்க்கப்போனால் நான் கல்யாணமே செய்து கொள்ளாமல் இருக்க வேண்டும்!"

"அந்தப் பேச்செல்லாம் இப்பொழுது எதற்கு விட்டுத் தள்ளு! சுந்தராமுக்குப் பத்திரிகை அனுப்பினாயோ?"

"எனக்கு அனுப்ப இஷ்டமில்லை; அப்பா அனுப்பியிருக்கிறார்!"

"நீ ஏன் அவனுக்குப் பத்திரிகை அனுப்ப வேண்டாம் என்று நினைத்தாய்?"

"ஜஸ்லோவுக்கு என் கல்யாணத்தைப் பற்றித் தெரியாதென்பதற்காகத் தான்!" என்றார் ராமநாதபாபு.

"என்றைக்காவது ஒரு நாள் தெரியத் தானே போகிறது?"

"இப்பொழுதே தெரியாதே, இல்லையோ?"

"சுந்தராம் உன் வீட்டில் எவ்வளவு நாள் இருந்திருக்கிறான்? உன்னிடம் அவனுக்கு எவ்வளவு பிரியம்? அவனுக்குப் பத்திரிகை அனுப்பாமல் இருப்பது நியாயமாகுமா?"

"நீ சொல்வது நியாயம்தான். ஆனால் எனக்கே இந்தக் கல்யாணத்தினால் ஒரு சுகமும் இல்லையே, அப்படியிருக்கும் பொழுது......"

"ஏன், உன் சுகத்திற்கு என்ன குறைச்சல்?"

"ஜஸ்லோவின் வாழ்வைக் கெடுத்து, என் வாழ்வையும் கெடுத்துக் கொள்வதில் எப்படியப்பா சுகம் கிட்டும்?"

"நீயா கெடுத்துக் கொள்கிறாய்? உலகத்தில் இப்படியெல்லாம் நடப்பது சகஜம். நாம் நினைத்தபடியே எல்லாம் நடந்து விடுவதில்லை. மனதை வீணே அலட்டிக் கொள்ளாதே!" என்றார் விராஜகிசோர்.

இதே மாதிரி இரு நண்பர்களும் இரவு வெகு நேரம் வரை பேசிக்கொண்டே இருந்தனர்.

மறு நாள் சம்பந்திகள் வருவதாயிருக்கவே, விராஜகிசோர் காலையில் எழுந்து விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதில் முனைந்தார்.

மத்தியானம் மணி பதினொன்று இருக்கும். ராமநாத பாபு தன் அறையில் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். துவாரக்காரி உள்ளே நுழைந்து "பாபுஜி, சுந்தராம் வந்து விட்டாருங்க!" என்றான்.

ராமநாத பாபு திடுக்கிட்டு, "இன்னும் யார் யார் வந்திருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

"சுந்தராமும் ஜஸ்லோவும் மட்டும்தான் வந்திருக்கிறாங்க!"

'ஜஸ்லோ' என்ற பெயரைக் கேட்டதும் ராமநாதபாபுவின் இதயம் 'படபட' வென்று அடித்துக் கொண்டது. அவர் உடனே எழுந்து சமையல் வேலையை மேற்பார்வை யிட்டுக்கொண்டிருந்த விராஜகிசோரைத் தனிமையில் அழைத்துச் சென்று, "நான் பயந்தபடியே நடந்துவிட்டதே!" என்றார்.

"என்ன!" என்று புருவத்தை நெரித்த வண்ணம் கேட்டார் விராஜகிசோர்.

"ஜஸ்லோ வந்திருக்கிறாள்."

"இன்னும் வேறு யார் வந்திருக்கிறார்கள்?"

"சுந்தராமும் வந்திருக்கிறான்."

"அவ்வளவுதானே? வந்தால் வரட்டுமே!"

"நான் எப்படி ஜஸ்லோவின் முகத்தில் விழிப்பது?"

"என்ன, இன்னமும் நீ அசட்டுப் பிசட்டு என்று பேசுகிறாயே!"

"உனக்கு என்ன தெரியும், என் உள்ளம் என்ன பாடு படுகிறது என்று? ஜஸ்லோ வந்துவிட்டாள் என்பதை அறிந்ததும் என் உணர்ச்சிகள் ஒங்கி விட்டனவே!"

"உன் பிதற்றல்களைக் கேட்டுக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை!" என்று சொல்லிவிட்டு, விராஜகிசோர் தன் வேலையில் ஈடுபட்டார். ராமநாதபாபு வாடிய முகத்துடன் தன் அறையை அடைந்து இங்கு மிங்கும் நடக்கலானார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் உள்ளே நுழைந்த சுந்தராம், ராமநாத பாபுவின் கால்களைத் தொட்டு வணங்குவதற்காகக் கையை நீட்டினான்.

"உன் வழக்கத்தை விடமாட்டாய்போலிருக்கிறதே! எனக்கு இது கொஞ்சம் கூடப் பிடிப்பதில்லை!" என்று கூறி அவனைத் தடுத்தார் ராமநாதபாபு.

சுந்தராம் கை கூப்பி, "சமாசாரம்......" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

"அதையெல்லாம் மறந்துவிடு, சுந்தராம்!" என்றார் ராமநாதபாபு.

"இந்த ஜன்மத்தில் அதை மறக்க முடியாது, எசமான்!"

"சரி, வீட்டில் எல்லாரும் சௌக்கியந்தானே?"

"எல்லாரும் சௌக்கியமே!"

"அப்பா, அம்மா வரவில்லையா?"

"அம்மாவுக்குத்தான் கண் சரியாயில்லையென்று உங்களுக்குத் தெரியுமே! அப்பாவுக்கு ரொம்பத் தள்ளாமை. அதனால் தான் வரவில்லை."

"சரி, போய் ஸ்நானம் செய்து விட்டு வா!" என்றார் ராமநாதபாபு.

சுந்தரம் வெளியே போய் விட்டான். ராமநாதபாபு மௌனமாக உலாவிக் கொண்டிருந்தார். சம்பாவதி அவருடைய அறைக்குள் நுழைந்து, "அண்ணா, ஜல்லோ வந்துவிட்டாளே!" என்றாள்.

"வந்துவிட்டாளா? — நல்லது!" என்றார் ராமநாதபாபு.

"இந்தத் தடவை ஜல்லோ ரொம்ப நன்றாக 'டிரஸ்' செய்துகொண்டு வந்திருக்கிறாள், அண்ணா!"

"அப்படியா? ஜமீன்தார் பெண்ணோ, இல்லையோ!"

"ஆனால் ரொம்ப இளைத்துப் போய் விட்டாள். கிராமத்தில் வசித்தால் உடம்பு தேறும் என்று ஜனங்கள் சொல்கிறார்களே, அது பொய்போல் தோன்றுகிறது, அண்ணா!" என்றாள் சம்பாவதி.

ராமநாத பாபுவின் உள்ளத்தில் வேதனை உண்டாயிற்று. அவர் சம்பாவதியிடம், "ஆமாம், உடம்புக்கு என்ன என்று அவளைக் கேட்டாயோ?" என்று கேட்டார்.


"இப்பொழுதுதானே வந்திருக்கிறாள்? இனிமேல்தான் கேட்க வேண்டும்."

"சரி, 'ஜல்லோவைக் கவனித்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு. அவளுக்கு எவ்வித சிரமமும் ஏற்படக் கூடாது!' தெரிந்ததா?"

"நீ எனக்குச் சொல்ல வேண்டுமாக்கும், எல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன்! அண்ணா!" என்று கூறி, சம்பாவதி அங்கிருந்து சென்றாள்.

ராமநாத பாபு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவாறு நாற்காலியில் உட்கார்ந்தார்.

(தொடரும்)


LUX
TOILET SOAP
"அழகையளிக்கும் உத்தமமான சோப்
லக்ஸ் டாய்லட்"
என்கிறார்
ஊர்மிளா தேவி
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும்
அழகையளிக்கும் சோப்!
LTS. 143-111-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED



"சித்தப்பா, சித்தப்பா! ஓர் அணு கொடு, சித்தப்பா!" என்று நான் சித்தப்பாவைக் கேட்பேன்.

"ஏலே, உனக்குக் காசு அருமை தெரியலேடா! ஓர் அணுவை என்னடா செய்வாய்?" என்று கேட்பார்.

அப்போது அவருடைய கண்கள் சிவக்கும். அவர் முகத்தில் மீசை மட்டும் இருந்தால் அது எவ்வளவு துடிப்புத் துடித்திருக்குமோ, தெரியாது!

"காசை என்னிடம் கொடுத்தால் அல்லவா தெரியும்? ஓர் அணுவில் என்னவெல்லாம் செய்யலாம்! இட்டிலி சாப்பிடலாம், பம்பரம், கோலி எல்லாம் வாங்கலாம்......" என்று நான் ஆரம்பிப்பேன்.

"சீ! போடா, அரட்டை!" என்பார் என் சித்தப்பா.

* * *

என் தகப்பனார் இறக்கும் தறுவாயில் சொத்தை எல்லாம் நான் பெரியவனாகும் வரையில் சித்தப்பாவே பரிபாலிக்க வேண்டும் என்று எழுதி வைத்து விட்டார். சித்தப்பாவோ வெகு சிக்கனம். சில்லறை வட்டிக்குக் கொடுத்து அப்பா வைத்த முதலை ஐந்துமடங்காகப் பெருக்கி வைத்திருந்தார். அவர் கட்டுவது கிழிந்த நாலுமுழ வேஷ்டிதான். காலையில் பழையதுதான் சாப்பிடுவார். வீட்டு அலுவல்களைத் தாமே பார்ப்பதால் நல்ல தேக அப்பியாசம் ஏற்பட்டு அவருடைய கைகளும் தோள்பட்டைகளும் கருங்கல்லாக இருக்கும். சினிமா, டிராமாவுக்குப் போகமாட்டார். கோயில் குளங்கள் என்று பணத்தை விரயம் செய்ய மாட்டார். ஆனாலும் அவருக்குத் தெய்வ பக்தி மிக அதிகம். அர்ச்சனை திரவியங்களை ஒன்றுக்கு இரண்டு விலை விற்கும் கடைக்காரன் அநியாய லாபமடைவதை அவர் ஒப்பமாட்டார். தம்முடைய பிரயாசையினால் தோட்டத்தில் விளையும் பூவோ தேங்காயோ கொண்டு தெய்வ ஆராதனை செய்வார். கோயிலில் இருந்து திரும்பினால் நொண்டி, முடம், கூன், குருடுகளுக்கு நிச்சயம் தர்மம் செய்வார். அவருடைய பொருளாதாரக் கலை, கலாசாலைப் படிப்பில்லாமலே உயர்தரமாக இருந்தது!

அப்பா சம்பாதித்து வைத்த பணத்தைச் செலவிட எனக்கு உரிமை இல்லை. ஓர் அணு வேண்டுமென்றாலும் சித்தப்பாவுக்குப் பூரா விவரமும் கொடுக்க வேண்டும். அதற்குமேல் அவர் இந்தச் செலவு அவசியமா இல்லையா என்று ஆலோசிப்பார். பிறகு அந்தச் செலவை இன்னும் சிக்கனமாகச் செய்ய முடியுமா என்று பரிசீலனை செய்து, கேட்டதற்குப் பாதி கொடுப்பார். இவ்வளவு கணக்காக இருக்கும் பேர்வழியிடம் புத்தகம் வேண்டுமென்றும், நோட்டு வேண்டுமென்றும் பொய்ப் பித்தலாட்டங்கள் சொல்லிக் காசு வாங்கிவிட முடியுமா? ஆகவே தீரா மனக்குறையுடன் வீட்டுக்கு வந்து புத்தகத்தைக் கட்டிக்கொண்டு அழவேண்டியதுதான். எத்தனையோ பேர் "உங்கப்பா சம்பாதித்து வைத்துவிட்டுப் போன சொத்துக்குத்தான் குறைவு உண்டா! ஆனால் அதை அனுபவிக்க நீ கொடுத்து வைக்கவில்லை!" என்று என்னிடம் சொல்லி விட்டுப் போவார்கள்! இன்னும் சிலர் என் சித்தப்பா கெட்ட எண்ணம் கொண்டே பணத்தை எனக்குக் கொடுக்கவில்லை என்று என் மனதைக் கலைத்தும் இருக்கின்றனர்.

எனக்கும் வயது ஆக ஆக, "எப்படியும் இந்தச் சித்தப்பா ஒழிந்தால்தான் நாம் சுகமாக இருக்க முடியும்" என்று தோன்றிற்று.

அன்று சித்தாப்பா எழுந்திருந்து வழக்கம்போல் காவேரிக்கு ஸ்நானம் செய்யப்போகும் நேரம். அவர் எழுந்திருக்கவில்லை. இன்னும் கொஞ்ச நேரம்

ஆயிற்று; சித்தப்பா புருஷ ஸூக்தம் சொல்லிக்கொண்டே வாசற்படியில் கால் மண்ணைத் தட்டிவிட்டு வீட்டிற்குள் நுழையும் சத்தம் கேட்கும் நேரம்கூட ஆகிவிட்டது; அவர் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவே இல்லை. எனக்குப் பயமாக இருந்தது. சித்தியைக் கூப்பிட்டேன். சித்தப்பாவைத் தட்டி எழுப்ப முயன்றேன். அவர் எழுந்திருக்கவேயில்லை. ஆம், அவர் எப்படி எழுந்திருப்பார்? அவருடைய உயிர்ப் பறவைதான் கூட்டை விட்டு எப்பொழுதோ பறந்துவிட்டதே!

சித்தப்பாவின் அகால மரணம் எனக்கு எவ்வளவோ துயரத்தை அளித்தது. இருந்தாலும் என் சொத்து இனி என்னைச் சேரும் என்று அந்தப் பால்ய வயதில் சந்தோஷப்பட்டேன். என்னுடைய இஷ்டப்படி பணத்தைச் செலவழிக்கலாம் என்று எண்ணினேன். அதற்கேற்றாற்போல், பெட்டிச் சாவியும் என்னிடம் வந்தது. புது உவகையுடன் பீரோவைத் திறந்தேன். தஸ்தவேஜுக் கட்டுகளைப் பிரித்தேன். சித்தப்பா செய்து வைத்த மரண சாஸனம் அகப்பட்டது. இப்படி ஒரு சாஸனத்தை மனுஷர் முன் கூட்டியே தயார் செய்து வைத்திருப்பார் என்று நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

நான் இன்னும் மைனாரிக் குணமுள்ளவனாகவே இருக்கிறபடியால், தமக்கு ஏதாவது திடீரென்று மரணம் சம்பவிக்குமானால், தமக்குப் பிறகு தம் தங்கை எல்லாச் சொத்தையும் பரிபாலித்து, அவன் எப்போது எனக்குச் சொத்தை வகிக்க யோக்யதை உண்டு என்று நினைக்கிறாளோ, அப்போது அந்தச் சொத்தை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சாஸனம் செய்து வைத்துவிட்டுப் போயிருந்தார்!

எனக்குத் தலை 'கிறுகிறு' என்று சுழன்றது. மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விடுவேன்போல் தோன்றிற்று! என் உள் மனசு 'செத்தும் கெடுத்தானே, சித்தப்பன்!' என்று சொல்லிக் கொண்டது!

இவையெல்லாம் அந்தக் காலத்தில் நடந்தவை. இப்போது நினைத்துப் பார்த்தால், என்னைப்போன்ற மடையன் ஒருவன் இருந்திருக்க முடியாது. என் சித்தப்பாவைப் போன்ற உத்தம மனுஷரும் இருந்திருக்க முடியாது என்று எனக்குத் தோன்றுகிறது!

காலக்ஷேபம்

உதாரணம்

பரமசாதுவான பக்கத்து வீட்டுக்காரரைப் பரமசிவம் ஒரு நாள் கன்னா பின்னாவென்று திட்டி விட்டார்.

பரம சாது:—அப்பா, பரமசிவம்! இதோ பார், ஒருவன் பல சாமான்களைக் கொண்டு போய் இன்னொருவனிடம் கொடுக்கிறான். அவன் அவைகளைப் பெற்றுக் கொள்ள மறுக்கிறான். அப்பொழுது அந்தச் சாமான்கள் யாரைச் சேரும்?

பரமசிவம்:—சுத்த பைத்தியமா யிருக்கிறீரே! இது ஒரு கேள்வியா? சாமான்கள் சொந்தக்காரனைத்தான் சேரும்!

பரம சாது:—ரொம்ப சரி! அப்படியானால் நீ திட்டிய வசவுகளையெல்லாம் நான் ஏற்றுக் கொள்ளவில்லை; மறுத்துவிட்டேன்!

என்ன செய்வான்?

வீட்டுக்கார அம்மாள்:—என்னடி, ருப்பாயி! உனக்கு நான் ஒரு ஐந்நூறு ரூபாய் எழுதி வைத்துவிட்டுச் செத்துப்போனால் நீ என்னடி செய்வாய்?

வேலைக்காரி:—இந்த அம்மாவைப் போல இன்னொரு வீட்டுக்கார அம்மா கிடைக்க மாட்டார்களான்னு தவம் கிடப்பேன்!

இருவரை பிரமாதம்!

பட்டிக்காட்டான் (கால் பந்து விளையாடும் இடத்தில்):—ஏன் இப்படி எல்லோரும் பந்தைத் துரத்திக்கொண்டு ஓடுகிறார்கள்?

பக்கத்திலிருப்பவர் ('கோல்' போடும் இடத்தைச் சுட்டிக் காட்டி):—அந்த இடத்தில் பந்து போய் விழவேண்டும்; அதற்குத்தான் இப்படி ஓடுகிறார்கள்.

பட்டிக்காட்டான்:—பூ! இவ்வளவுதானா? குதிக்கேயும் தெருக்கேயும் இப்படி விழுந்தடித்துக்கொண்டு எல்லாரும் ஓடினால் எப்படிப் பந்து அந்த இடத்தை அடையும்? யாராவது ஒருவன் மட்டும் உதைத்தால் பந்து தானாகப் போய் விழுகிறது!

தெரியாத விஷயம்

"என் ஸார், நேற்று இரவு ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது என் நண்பன் சோமுவிடம், 'அவன் ஒரு அற்பன்!' என்று என்னைப் பகிரங்கமாகத் திட்டிவிட்டாயே!"


"தயவுசெய்து மன்னிக்கணும்! அது அவ்வளவு ரகசியமான சமாசாரம் என்று இதற்கு முன் எனக்குத் தெரியவே தெரியாது!"

குறைந்தபட்ச தியாகம் செய்து சேமிப்புகளைப் பெருக்குவது எப்படி

AC-92-TM



பிரசினை: நான்கு தீக்குச்சிகளைக் கொண்டு, இரண்டு சதுரங்களை நான்கு சதுரங்களாக மாற்றவும்.



விடை: அதிகப்படியான நான்கு தீக்குச்சிகளைப் படத்தில் காட்டியுள்ளபடி அமைக்கவும்.

ஒரு நான்கு தீக்குச்சிகளை விவேகத்துடன் அமைப்பதனால், அவை எட்டுக் குச்சிகளின் வேலையைச் செய்யும்படிப் பண்ணலாம். அதுபோலவே, உம்முடைய சேமிப்பைக் கொண்டு என்ன செய்ய வேண்டுமென்பதை அறிவதனால், நீர் உம்முடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தில் அதிகபட்ச பலனைப் பெறக்கூடும். நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை வாங்கவும்—இவை சிறு சேமிப்புக்காரர்கள் பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பதற்காகவென்றே ஏற்படுத்தப்பட்ட சாதனமாகும்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்.

இவை முக்கியமான அநுகூலங்களாகும் :—

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவரா யிருந்தாலுஞ் சரி மைனராயிருந்தாலுஞ் சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்கமுடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவிதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது யாதொரு கவர்ன்மெண்ட் பத்திரத்தின்மேல் கிடைக்கக் கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம் டாக்ஸ் செலுத்த வேண்டியதில்லை.

5. இவைகளை 3 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வரப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸ்களிலாவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற ஏஜென்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக் கொள்ளலாம்.

உம்முடைய ஸேவிங்ஸ் க்ரூப்பில் இப்போதே சேரவும்

மீண்ட சுவர்க்கம்

என். நாராயணன்

அன்று பள்ளிக்கூடம் முடிந்ததும் வழக்கம்போல் சாவித்திரி, லலிதாவுடன் அவள் அறைக்குச் சென்றாள்.

இருவரும் அறைக்குள் நுழைந்ததும் சாவித்திரியிடம், "இன்று உங்களுக்கு ஒரு அதிசயம் காத்திருக்கிறது!" என்றாள் லலிதா சிரித்துக்கொண்டே.

"என்ன அதிசயம்?" என்று ஆவல் மிகுந்தவளாய்க் கேட்டாள் சாவித்திரி.

"இதோ, இதுதான்!" என்று சற்று சங்கோசப்பட்டவளாய், ஒரு கடிதத்தை எடுத்துச் சாவித்திரியிடம் நீட்டினாள் லலிதா.

"என் பிரியமுள்ள லலிதாவுக்கு அநேக ஆசீர்வாதம்; க்ஷேமம். இப்பவும் வருகிற ஆனி மீ 17உ வெள்ளிக்கிழமை உனக்குக் கலியாணம் செய்து வைப்பதாய்ப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீ வருகிற சனிக்கிழமையிலிருந்தே பதினைந்து நாட்களுக்கு லீவு வாங்கிக் கொண்டு புறப்பட்டு வா. வேறு விசேஷமில்லை. மற்றவை நேரில்.

உன் பிரியமுள்ள
அப்பா."

கடிதத்தை வாசிக்கும்பொழுதே சாவித்திரிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை "லல்லூ, என்னிடம் ஏன் இதைப்பற்றி நீ இதுவரையில் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் இருந்தாய்?...இருக்கட்டும், இருக்கட்டும். உன்னை என்ன செய்கிறேன் என்று பார்!...ஆமாம், பிள்ளை உன்னைப் பார்த்தாகிவிட்டதா? ... மற்ற விஷயங்களெல்லாம் எப்பொழுது நிர்மாணிக்கப்பட்டன?" என்று கேட்டாள்.

"உங்களிடம் நான் இதுவரையில் எதையாவது மறைத்திருக்கிறேனா? உங்களைவிட அந்தரங்கமானவர் எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்? இந்த விஷயத்தைப் பற்றி உங்களிடம் நானாகச் சொல்லிக் கொள்ளச் சற்று வெட்கமாயிருந்தது. அதனால்தான் அதை வெளியிடவில்லை. கோடை லீவுக்கு நான் ஊருக்குப் போயிருந்தேனல்லவா? அப்பொழுதுதான் அப்பா என் கல்யாணத்தை நிச்சயம் செய்தார். மாப்பிள்ளையும் வந்து பார்த்துவிட்டுப் போய்விட்டார். ...அவரும் அவருடைய அம்மாவுந்தான் வந்து பார்த்தார்கள். அப்பா முகூர்த்தத்தை ஆனி மாதத்தில்தான் வைத்துக் கொள்ள முடியும் என்று சொல்லிவிட்டார். அவர்களும் சரியென்று ஒப்புக் கொண்டார்கள். நான் அதற்குள் பள்ளிக்கூடம் திறந்துவிடவே வந்துவிட்டேன்......"

"அப்படியானால் கலியாணமானவுடன் நீ பள்ளிக்கூடத்திற்குத் திரும்பி வரமாட்டாய்! அப்புறம் படிப்பின்மேல் உன் கவனம் செல்லுமா? ஊஹூம் ... என்னைக் கூட மறந்து விடுவாய்!..."

"அப்படி நினைக்காதீர்கள்! உங்களை மறப்பதா? ஒருநாளுமில்லை. மேலும், நான் கலியாணத்திற்காகப் படிப்பை நிறுத்தப் போவதில்லை. என் தந்தையும் என்னை 'மெட்ரிகுலேஷன்' வரையிலாவது படிக்க வைப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார். சரி, அது கிடக்கட்டும். நீங்கள் அவசியம் கலியாணத்திற்கு என்னுடன் வரவேண்டும். நாளைக்கே லீவுக்கு எழுதிப் போட்டு விடுங்கள். குறைந்தது பத்து நாட்களுக்காவது லீவு போடுங்கள்!" என்று ஆர்வத்துடன் கூறினாள் லலிதா.

சாவித்திரி சிரித்தாள்.

"நானும் வருவதா? பேஷ்! பள்ளிக்கூடம் திறந்து ஒரு மாதம் பூர்த்தியாகவில்லை. அதற்குள் பத்து நாட்களுக்கு லீவு கேட்டால் கிடைக்குமா, என்ன?... மேலும் உனக்குத்தான் தெரியுமே, என் தாயாரைத் தனியாக விட்டுவிட்டு நான் வெளியே அதிக நாள் போயிருப்பதும் முடியாத காரியம். நான் வராவிட்டாலும் என் உயிர் உன்னுடன்தானிருக்கும் என்பதில் சந்தேகமில்லை."

"அதெல்லாம் முடியாது. நீங்கள் எப்படியாவது லீவு வாங்கிக்கொண்டு என்னுடன் வந்தால்தான் நான் போவேன்! ... இல்லாவிட்டால் நானும் போகமாட்டேன்!" என்று பிடிவாதமாகக் கூறினாள் லலிதா.

2

சாவித்திரிக்கு வயது இருபத்தியொன்று ஆகிவிட்டதென்றாலும் அவளைப் பார்ப்பவர்கள் யாரும் பதினாறுக்கு மேல் மதிக்க மாட்டார்கள். தெய்விகம் பொருந்

றிய அவளது செளந்தரியம் காண்போர் மனதைக் கவரத் தக்கதா யிருந்தது.

திருச்சியில், "மைத்ரேயி வித்யாசாலை" யில் அவள் எட்டாவது வகுப்புக்கு உபாத்தியாயினியாக உத்தியோகம் பார்த்து வந்தாள். அந்த வகுப்பில்தான் லலிதா படித்து வந்தாள்.

அன்று மாலை வீட்டுக்கு வந்ததும் தன் தாயாரிடம், "அம்மா, நம் லலிதாவுக்குக் கலியாணமாம்! அவள் அப்பாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. என்னையும் கலியாணத்துக்கு வந்தால்தான் ஆச்சு என்று பலவந்தப்படுத்துகிறாள்!" என்று மூச்சு விடாமல் கூறினாள் சாவித்திரி.

"ஹூம்...........எல்லோருக்குந்தான் கலியாணமாகிறது; புக்ககம் போகிறார்கள்; குடும்பம் நடத்துகிறார்கள்; சந்தோஷமாயிருக்கிறார்கள்! பாவி, என் கண்கள் மாத்திரம் இந்தக் காட்சியைத்தான் கண்டு கொண்டிருக்கிறது!" என்று வருத்தப்பட்டுக் கொண்டே, அபிராமியம்மாள் தன் கண்களில் தேங்கி நின்ற நீரைத் துடைத்துக் கொண்டாள்.

* * *

சிவராம அய்யருக்குச் சாவித்திரி ஒரே பெண். அவருக்குத் திருச்சியில் பள்ளிக்கூடமொன்றில் உபாத்தியாயர் வேலை. மாதம் அறுபது ரூபாய் சம்பளம் கிடைத்து வந்தது. ஒன்றிரண்டு 'ட்யூஷன்'களிலிருந்தும் மாதம் பதினைந்து, இருபது கிடைக்கும். சிக்கனமான வாழ்க்கையின் பயனாகச் சிவராமய்யர் ஏதோ கொஞ்சம் ரொக்கம் சேர்த்து வைத்திருந்தார். சாவித்திரியின் கலியாணச் செலவுக்கு என்றே அந்தப் பணத்தை ஒதுக்கி வைத்திருந்தார்.

மங்கைப் பருவத்தின் பரிபூர்ணமான லாவண்யத்துடன் திகழும் தன் மகளுக்கு வரன் தேடத் தொடங்கினார் சிவராம அய்யர். கணக்கற்ற இடங்களுக்குச் சென்றார், அலைந்தார், திரிந்தார். ஜாதகங்களை மூட்டை மூட்டையாகக் குவித்து, ஜோசியர்களைக் கலந்து ஆலோசித்தார்.



கடைசியில் ஒரு வரன் அவர் மனதுக்குத் திருப்தி யளித்தது. அந்த ஜாதகம் சாவித்திரியின் ஜாதகத்துடன் எல்லா விதங்களிலும் மிகவும் நன்றாகப் பொருந்தி யிருப்பதாக ஜோசியர்கள் கூறினர்.

பிள்ளை நாகராஜன் பி.ஏ. வரை படித்திருந்தான். மதுரையில் அவனுக்கு ரயில்வே உத்தியோகம். தகப்பனார் கவர்ன்மெண்ட் உத்தியோகத்திலிருந்து 'பென்ஷன்' வாங்கிக் கொண்டிருப்பவர். நாகராஜன்தான் மூத்த பிள்ளை. அவனுக்கு அடுத்தாற்போல் இன்னொரு பிள்ளையும், பெண்ணும் இருக்கின்றனர். ரொக்கம் கொஞ்சமும், நிலபுலன்களும் உண்டு. கண்ணியமான குடும்பம். பிள்ளைக்குத் தாயாரும் இருக்கிறாள் — இவையனைத்தும் கலியாணத் தரகர்களால் 'உத்தியோக முறை'யில் அறிவிக்கப்பட்ட புள்ளி விவரங்கள்.

குறிப்பிட்ட தினத்தில் நாகராஜனும் அவன் தாயாரும் சிவராம அய்யரின் வீட்டு வாசலில் குதிரை வண்டியில் வந்து இறங்கினர். சிவராம அய்யர் அவர்களை வரவேற்று உபசரித்து, உள்ளே அழைத்துச் சென்றார்.

சாவித்திரி அன்று வெகு நேர்த்தியாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். நாகராஜன் அவளைப் பார்த்த மாத்திரத்திலேயே மெய்ம்மறந்து விட்டான்! அவன் தாயார் குட்டியம்மாள் சாவித்திரியை வெகு உன்னிப்பாகக் கவனித்தாள். முதன் முதலாக உத்தியோகம் ஏற்றுக்கொள்பவனுக்கு அரசாங்கத்தில் வைத்தியப் பரிசோதனை செய்வார்களே, அப்படித்தான் தோன்றியது சாவித்திரிக்கு!

தனக்கு நாட்டுப் பெண்ணாக வரப்போகிறவளுக்கு என்னென்ன நகைகள் செய்து போட்டிருக்கிறார்கள் என்பதை யறியவேண்டியே குட்டியம்மாள் சாவித்

திரியை ஒவ்வொரு அங்கமாகப் பரீட்சித்துக் கொண்டிருந்தாள் என்பது ஒருவருக்கும் தெரியாது!

ஒருவிதமாகக் கலியாணம் நிச்சயம் செய்யப்பட்டது. வரதட்சிணை மாத்திரம் மூவாயிரம் ரூபாய் என்று நிர்மாணிக்கப் பட்டது. சிவராம அய்யரால் அவ்வளவு பெரிய தொகை கொடுத்து, இன்னும் ஏனைய கலியாணச் செலவுகளையும் ஏற்றுக் கொண்டு நடத்துவ தென்பது மிகச் சிரம மானதுதான். ஆயினும், அவருக்கு எப்படி யாவது இந்த வரனை நழுவ விடாமல் கலியா ணத்தை முடித்துவிட வேண்டுமென்று மனதில் தோன்றிவிட்டது. ஆகவே, எவ் வளவு செலவானாலும் சரி, முடித்து விடுவது என்று நிர்மாணித்து விட்டார்.

கலியாணத்தின் பொழுது சம்பந்தி குட்டியம்மாள் செய்த அட்டகாசங்களும், படுத்தி வைத்த பாடுகளும் கொஞ்ச நஞ்ச மல்ல. ஒன்றுந் தெரியாத அப்பாவிகளான சிவராம அய்யரையும், அபிராமியம்மாளையும் நிமிஷத்துக் கொரு தடவை கண்ணில் விரலை விட்டு ஆட்டாத குறையாக ஏதாவது குறை சொல்லிக் குற்றம் கண்டு பிடித்துக் கொண்டிருந்தாள். 'அது போதவில்லை' என்பாள். 'இது சரியாக இல்லை' என்பாள். 'அது வரவில்லை' என்று சீறுவாள். 'இது செய்யவில்லை' என்று குதிப்பாள்!

கலியாணம் முடிந்து சம்பந்திகள் ஊரை விட்டுப் போன பிறகு, நிம்மதியாக உட் கார்ந்து கணக்குப் பார்த்தார் சிவராம அய்யர். பாங்கியிலிருந்த ஐயாயிரம் ரூபாயில் ஒரு தம்பிடிகூடப் பாக்கியில்லாமல் எல்லாம் செலவழிந்து விட்டது என்ற உண்மையை உணர்ந்தவுடன் ஒரு வினாடி அவருக்குத் திடுக்கிட்டது. ஆனால், வெகு சீக்கிரமே சமாளித்துக் கொண்டார்.

"நமக்கிருப்பது ஒரே பெண். அவளுக் குச் செலவழிக்காமல் வேறு யாருக்குச் செலவழிக்கப் போகிறோம்?" என்று தமக்குத்தாமே சமாதானப் படுத்திக் கொண்டார்.

ஆனால் அவருடைய மனச் சாந்தியைக் கலைத்து, அவர் மனதைக் குழப்பக் கங் கணம் கட்டிக் கொண்டிருந்தவள்போல் சம்பந்தி குட்டியம்மாள் வாரத்திற்கு ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு கடிதத்திலும் அவள் அதே பல்லவியைத்தான் பாடிக் கொண்டிருந் தாள். அதாவது, "சீர் செய்தது போதாது!" என்ற பல்லவிதான் அது!

கடைசியாகச் சிவராம அய்யரின் பொறு மையைச் சோதிக்க வந்ததுபோல் குட்டியம் மாளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் நாகராஜனின் சாந்திக் கலியாணத்திற்குக் குறைந்தது ஆயிரம் ரூபாய்க்குச் சீர் செய் தால்தான் அதை நடத்துவதாக உத்தேசம் என்றும், இல்லாவிட்டால் நடத்துவதாக உத்தேசமில்லை என்றும் கண்டிப்பாகத் தெரிவித்திருந்தாள்.

ஆயிரம் ரூபாய்க்கு அவர் எங்கே போவது?......

அதே ஏக்கத்தில் சிவராமய்யர் படுத்து விட்டார். அவருடைய நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வந்தது. அபிராமி அம்மாளும் சாவித்திரியும் இன் னது செய்வதென்று தெரியாமல் திகைத் துத் தவித்தனர். தங்களாலான சிசுருஷை களைச் செய்தனர். ஆயினுமென்ன? நிம சென்று ஒரு நாள் இரவு சிவராமய்யர் கண்களை மூடிவிட்டார்.

ஆறு வருஷங்கள் பறந்தோடிவிட்டன. எப்படியோ சாவித்திரியும் தன் துக்கத்தை அடியோடு மறந்து விட்டாள். தனக்குக் கலியாணமாகிவிட்டது என்ற எண்ணங் கூட அவள் சிந்தனையிலிருந்து அகன்றுவிட் டது. தன்னிடம் பாடங் கற்கும் மாணவி களின் முகங்களில் தோன்றும் மகிழ்ச்சிப் பெருக்கில் தன் குறைகளையும் கவலைகளை யும் பற்றி எண்ணக்கூடத் தோன்றவில்லை அவளுக்கு. இந்த நிலைமையில்தான் அன்று லலிதாவின் கலியாணத்தைப் பற்றிய பேச் சும், அதைப்பற்றி அவள் தன்னுடைய தாயிடம் வந்து கூறியதும், அதன் விளை வாக அவளுடைய தாயார் வருத்தப் பட்டதும் நிகழ்ந்தன.

3

'ஹெட் மிஸ்ட்ரெஸ்' உத்தராவின் பேரில் பத்து நாட்கள் லீவு வாங்கிக் கொண்டு, லலிதாவுடன் ஊருக்குக் கிளம்பி னாள் சாவித்திரி.

ஊரில், லலிதாவின் தந்தை இருவரை யும் வரவேற்று, சாவித்திரிக்கு விருந்து உபசாரம் செய்தார்.

வியாழக்கிழமை இரவு ஒன்பது மணி யிருக்கும். பெண் வீட்டார் எல்லோரும் — லலிதா, சாவித்திரி, இன்னும் ஒன்றிரண்டு கிழவிகள், இவர்களைத் தவிர — மாப் பிள்ளையை ஊர்வலமாக அழைத்து வரப் பக்கத்திலிருந்த பெருமாள் கோவி லுக்குச் சென்றிருந்தனர். வீட்டின் மேன்

மாடியில் உட்கார்ந்துகொண்டு லலிதாவும் சாவித்திரியும் அளவளாவிக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மேள வாத்தியத்தின் நாதமும் விளக்குகளின் ஒளியும் நெருங்கவே இருவரும் ஆவலுடன் ஓடி ரகசியமாக ஓரிடத்தில் நின்று கொண்டு, கூட்டத்தையும் மாப்பிள்ளை உட்கார்ந்திருக்கும் விமரிசையையும் கண்டு ஆனந்திக்கத் தயாராக நின்றனர்.

மாப்பிள்ளை உட்கார்ந்திருந்த மோட்டார் அவர்கள் வீட்டுக்கு எதிரே வந்து நின்றது. இருவரும் வெகு ஆவலுடன் மாப்பிள்ளையையே உற்றுப் பார்த்தனர். உள்ளம் பூரித்தவளாய் மெய்ம்மறந்து நின்றாள் லலிதா. அதே சமயத்தில், சாவித்திரி திடீரென்று மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்தாள்.

லலிதா திடுக்கிட்டவளாய்க் கீழே ஓடி ஒரு சிறிய பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து, சாவித்திரியின் முகத்தில் தெளித்துச் சைத்தியோபசாரம் செய்தாள்.

சாவித்திரி கண்விழித்துச் சுயப் பிரக்ஞையுடன் எழுந்து உட்கார்ந்தவுடன் லலிதா பரபரப்புடன், "ஏன் அப்படி திடீரென்று மூர்ச்சித்து விழுந்துவிட்டீர்கள்? என்ன நேர்ந்தது?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை, லல்லு! எனக்கே இன்னதென்று தெரியவில்லை!" என்று மழுப்பினாள் சாவித்திரி.

சிறிது நேரத்திற்குப் பிறகு லலிதாவை யாரோ கூப்பிட்டதால், அவள் சாவித்திரியைத் தனியே விட்டுவிட்டுச் சென்றாள்.

தனிமையில் உட்கார்ந்திருந்த சாவித்திரியின் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கித் தவித்தது.

ஆறு வருஷங்களுக்கு முன்னால் தன்னைத் தொட்டுத் தாலி கட்டிய புருஷனே இன்று இன்னொருத்திக்கு மாலையிடுவது என்றால் எந்தப் பெண்ணின் இருதயந்தான் துடிக்காமலிருக்கும்?

"ஆம், அவரேதான்! சிறிதுகூடச் சந்தேகமில்லை. என் கண்கள் என்னை ஏமாற்றுகின்றனவோ என்று ஒரு தடவைக்கு மூன்று தடவைகளல்லவா பார்த்தேன்! இனி நான் ஏன் இங்கு இருக்க வேண்டும்? அவரோ இன்னொரு மங்கைக்கு மாலையிடப் போகிறார்! அவருக்கு மனைவியாகப் போகிறவளோ என் பிராண சிநேகிதி! இவர்களுடைய கலியாணக் காட்சியை இனியும் பார்த்துச் சகித்துக் கொண்டு, என் மனதிலுள்ள போராட்டத்தை லலிதாவிடம் வெளியிடாமலிருக்க முடியுமா என்பது சந்தேகந்தான்! அவளிடம் என் ரகசியத்தை வெளியிட்டுத்தான் ஆகவேண்டும் என்ற சந்தர்ப்பம் ஏற்படுமுன் இந்த இடத்தை விட்டுப் போய்விடுவதுதான் உத்தமம்!"

இவ்வளவு எண்ணங்களும் இரண்டு நிமிஷங்களுக்குள்ளாக அலைமோதிக் கொண்டு அவள் மனதை அந்தரித்து விட்டன. லலிதாவிடம் சொல்லிக்கொள்ளாமல் கிளம்பிவிடுவது என்று நிர்மானித்தவளாய், தான் கொண்டு வந்திருந்த சிறிய கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு, சந்தடியின்றி ஒருவர் கண்ணிலும் படாமல் வீட்டிற்கு வெளியே வந்து விட்டாள். சுமார் ஐம்பது கஜ தூரத்தில் ஒரு குதிரை வண்டி நின்றுகொண்டிருந்தது. அதில் ஏறி உட்கார்ந்து கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓட்டச் சொன்னாள்.

ரயில்வே ஸ்டேஷனில் கூட்டம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. ஜனங்கள் ஒருவரையொருவர் மனிதரென்று பாராமல் நசுக்கிக் கொண்டும், மிதித்துக் கொண்டும், தள்ளிக் கொண்டும், டிக்கெட் வாங்குவதற்கு முயன்று கொண்டிருந்தனர். இந்தப் பயங்கரக் காட்சியைக் கண்டதும் சாவித்திரிக்குப் பிரமிப்புத் தட்டியது. டிக்கெட் வாங்காமலே ஊருக்குப் போய்விடுவது என்று நிர்மானித்தவளாய், ரயிலில் ஏறி உட்கார்ந்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் பிளாட்பாரத்திற்குச் சென்றாள். ஆனால், ரயிலில் காலை வைக்கக்கூட இடமில்லை. ஆண்களும், பெண்களும், கிழவர்களும், வாலிபர்களும், குழந்தைகளும் தங்களுடைய உயிரே போனாலும் சரி, எப்படியாவது தங்கள் தேகத்தை ரயிலுக்குள் நுழைத்துவிட வேண்டுமென்ற ஒரே தீவிர வைராக்யத்துடன் ஒருவரையொருவர் நசுக்கிப் பிழிந்து கொண்டிருந்தனர்!

இந்தக் கூட்டத்திற்கு முன் சாவித்ரி எம்மாத்திரம்? ரயிலில் ஏறவேண்டும் என்ற எண்ணத்தையே கைவிட்டு விட்டாள்!

ரயில் புறப்பட்டுத் தன் பிரயாணத்தைத் தொடங்கியது.

சாவித்திரி கற்சிலைபோல் உட்கார்ந்து விட்டாள்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு அவளுக்குச் சுய ஞாபகம் வந்தது. மீண்டும் அவள் மனம் சிந்தனைக் கடலில் மூழ்க ஆரம்பித்தது.

"என்னை இம்மாதிரி வஞ்சித்து, ஏமாற்றி, உதறிப் புறக்கணித்துத் தள்ளினாலும் லலிதாவாவது பாவம், நன்றாயிருக்கட்டும்!...ஆனால், ஆறு வருஷங்களுக்கு முன்பு என்னைக் கலியாணம் செய்துகொண்டு, என் தந்தையிடமிருந்து கடைசித் தம்பிடி வரையில் பிடுங்கிக்கொண்டு கடைசியில் என்னைப் புறக்கணித்து விட்டதுபோல் லலிதாவையும் புறக்கணித்து விடுவார்களோ? அந்த மாமியார் எதைச் செய்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை! பணத்தாசை பிடித்த அந்த ராட்சஸி எதை வேண்டுமானாலும் செய்வாள்!"

சாவித்திரியின் தேகம் சிலிர்த்தது. ஆவேசம் பிடித்தவளைப்போல் எழுந்தாள்.

"உடனே ஓடிச் சென்று லலிதாவின் தந்தைக்கு எல்லா விவரங்களையும் கூறி, எப்படியாவது இந்தக் கலியாணத்தை நிறுத்திவிட வேண்டும்!...இல்லையேல், என் கடமையிலிருந்து நான் தவறியவளாவேன்!" என்று தீர்மானித்துக் கொண்டாள்.

கலியாண வீட்டிலிருந்து எவ்வளவு ரகசியமாக வெளியேறினாளோ, அவ்வளவு ரகசியமாகத் திரும்பி வந்தாள். "எங்கே போய் விட்டீர்கள்? உங்களை ஒரு இடம் பாக்கியில்லாமல் தேடிவிட்டேனே!" என்றாள் லலிதா ஆச்சரியத்துடன்.

சாவித்திரி சிரித்துக்கொண்டே, "பக்கத்தில் எனக்குத் தெரிந்த ஒரு பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தேன், நாழியானதே தெரியவில்லை! ... ஹூம் ... லல்லு, உன்னிடம் ஒரு முக்கியமான சமாசாரம் சொல்லவேண்டும். உனக்கு மாமியாராகப் போகிறவள் மகா பொல்லாதவளாம். எவ்வளவு சீர் செய்தாலும் போதாது என்று குற்றம் கண்டு பிடிப்பாளாம்! ஏன், மூத்த மாட்டுப் பெண்ணைச் சரியாகச் சீர் செய்யவில்லை என்ற காரணத்திற்காகத் 'தள்ளி'யே வைத்துவிட்டாளாம்!" என்றாள்.

"என்ன! நிஜமாகவா?" என்று பிரமிப்புடன் கேட்டாள் லலிதா.

"ஆம்; அதைத்தான் சொல்ல வந்தேன். உங்களுக்கு அந்த ரகசியம் தெரிந்திருக்காது என்று நான் நினைத்தது சரிதான். உங்களையெல்லாம் அவர்கள் ஏமாற்றி விட்டார்கள், லல்லு! அவருடைய மூத்த மனைவி உயிருடன்தான் இருக்கிறாள்! அவள் உள்ளம் உடைந்தும் உடல் குன்றவில்லை; மனம் இடிந்தும், மணம் இழக்கவில்லை!"

"அப்படியானால் உங்களுக்கு அவளைத் தெரியும் போலிருக்கிறதே!"



"உனக்குக்கூட அவளை நன்றாகத் தெரியும். அந்த அபாக்கியவதி வேறு யாருமில்லை, லல்லு! நான்தான்!"

விதியின் விளையாட்டுகள் விசித்திரமானவை. சிறிது நேரத்திற்கு முன் ஊர்வலத்தில் தனது கணவனைக் கண்டு மூர்ச்சித்து விழுந்த சாவித்திரிக்கு லலிதா சைத்தியோபசாரம் செய்தாள்; இப்பொழுது லலிதாவிற்கு அதே உபசாரத்தைச் சாவித்திரி செய்துகொண்டிருந்தாள்!

லலிதா சுய உணர்வு பெற்றெழுந்தவுடன், சாவித்திரி அவளுக்குத் தன் வர



வாறு முழுவதையும் கூறினாள். தன் தந்தை தன் கலியாணத்துக்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்ததிலிருந்து, சற்று நேரத்திற்கு முன்பு தான் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்விட்டுத் திரும்பியது முடிய எல்லாவற்றையும் ஒன்று விடாமல் தெரிவித்தாள்.

“அப்படியானால் இப்பொழுதே நான் அப்பாவிடம் எல்லா விவரங்களையும் கூறி, இந்தக் கலியாணத்தை நிறுத்தச் சொல்லி விடுகிறேன்!” என்று லலிதா உத்வேகத்துடன் சொல்லிக் கொண்டிருக்கையில்,

“ஏன், அம்மா?” என்று கேட்டுக் கொண்டே அவர்கள் இருந்த அறையின் பக்கமாக வந்தார் சுந்தரமய்யர்.

காட்டாற்று வெள்ளம்போல் பொங்கி வந்த உணர்ச்சிகளைத் தன்னால் முடிந்தவரை அடக்கிக்கொண்டு, சாவித்திரி சிறிது நேரத்திற்கு முன் தன்னிடம் கூறிய வரலாற்றை அப்படியே ஒப்புவித்தாள் லலிதா.

சுந்தரமய்யர் சாவித்திரியைப் பார்த்தார். “உன்னையா அம்மா, அந்தப் பாவிகள் ஒதுக்கித் தள்ளிவைத்தார்கள்? கழுதைக்குத் தெரியுமா, கற்பூர வாசனை? ஹூம்... என்னையுமா வஞ்சிக்கப் பார்த்தார்கள்?... அந்தக் கிராதகிதான் செய்யச் சொன்னாள் என்றால், படித்த இந்த முட்டாளுக்குப் புத்தி எங்கே போயிற்று என்று கேட்கிறேன்! சரி, நடந்தது நடந்துவிட்டது. இனித் தாமதிப்பானேன்? இப்பொழுதே போய் அவர்களைக் கவனிக்கிறேன்!” என்று சொல்லிக் கொண்டே, சண்டமாருதம் போல் வெளியே சென்றார் சுந்தரமய்யர்.

4

பிள்ளை வீட்டார் இறங்கியிருந்த வீட்டிற்குள் நுழைந்த சுந்தரமய்யர், குட்டியம்மாளைப் பார்த்து, “நான் கேட்பதற்கு ‘உண்டு’ அல்லது ‘இல்லை’ என்று பதில் சொல்லுங்கள்: ஏற்கெனவே உங்கள் பிள்ளைக்குக் கலியாணமாகி விருப்பது பொய்யா, நிஜமா?” என்று மிதமிஞ்சிய கோபத்துடன் ஒவென்று இரைந்தார்.

"ஏற்கெனவே கலியாணமா! யார் சொன்னார்கள்? எல்லாம் பொய்!" என்று குட்டியம்மாள் சொல்லி முடிப்பதற்குள் பின்னாலிருந்து, "எது பொய்?" என்று குரல் கேட்கவே, எல்லோரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர். மணப்பெண்ணான லலிதாவுடன் சாவித்திரி நின்று கொண்டிருந்தாள்.

குட்டியம்மாளும், நாகராஜனும், இன்னும் சிலரும் ஏக காலத்தில் பிதுங்கும் விழிகளுடன், "ஹா! சாவித்திரியா?" என்று வாய்விட்டுக் கூறினர்.

சாவித்திரி, லலிதாவின் கையைப் பிடித்துக்கொண்டு அவர்களுக்கு அருகில் வந்தாள். அவள் குட்டியம்மாளைப் பார்த்து, "எது மாமி, பொய்? எங்கே, என் முகத்தைப் பார்த்து, 'உன்னை நான் மணம் செய்து கொள்ளவில்லை!' என்று உங்கள் பிள்ளையைச் சத்தியம் செய்யச் சொல்லுங்கள்!" என்றாள்


குட்டியம்மாள் ஸ்தம்பித்து விட்டாள். ஒரு நிமிஷம் அங்கே நிசப்தம் குடிகொண்டிருந்தது.

திடீரென்று மாப்பிள்ளை நாகராஜன் எழுந்து சுந்தரமய்யரிடம் வந்து தழுதழுத்த குரலில், "என்னை மன்னிக்க வேண்டும். சாவித்திரி கூறியது உண்மை. அவள் அக்கினி சாட்சியாக மணக்கப்பட்ட என் மனைவிதான்! நான் ஒரு படித்த முட்டாள்! என் தாயாரின் வாய்க்குப் பயந்து, அவள் போதனைக் கிணங்கி, அவள் செய்த ஆக்கினைகளுக்குப் பணிந்து, கடந்த ஆறு வருஷங்களாகச் சாவித்திரியை நான் கண்ணெடுத்தும் பாராமல் இருந்து விட்டேன். என்னுடைய கோழைத்தனத்தைப் பற்றி நினைக்க நினைக்க எனக்கே வெட்கமாயிருக்கிறது. இனி நான் சாவித்திரியைக் கைவிட மாட்டேன். இது சத்தியம்! நீங்கள் லலிதாவின் கலியாணம் நின்று விட்டதே என்று சிறிதுகூடக் கவலையோ, வருத்தமோ அடைய வேண்டாம். இதோ என் தம்பி பாலு இருக்கிறான். தங்கக் கம்பி என்று சொன்னால் அவனுக்குத்தான் பொருந்தும். என்னைவிட மூன்று வயது இளையவன். பி. ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் தேறிப் 'புரொபஸ'ராக இருக்கிறான். ஜாதகப் பொருத்தம் பார்க்க வேண்டிய சிரமங்கூடத் தங்களுக்கு வேண்டாம். ஏனென்றால் உங்கள் பெண்ணின் ஜாதகம் முதலில் எங்களுக்கு வந்த பொழுது, என் தம்பியின் ஜாதகத்தையும் லலிதாவின் ஜாதகத்தையும் நாங்கள் ஜோசியரிடம் கொடுத்துப் பார்க்கச் சொன்னோம். அவை யிரண்டும் நன்றாகப் பொருந்தி யிருப்பதாக ஜோசியர் கூறினார். ஆனால், பணத்தாசை கொண்ட என் தாயாருக்கு எனக்கு இன்னொரு மணம் செய்விக்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அவள் என் ஜாதகத்தையும் லலிதாவின் ஜாதகத்தையும் ஜோசியரிடம் கொடுத்துப் பார்க்கச் சொன்னாள். அவை யிரண்டும் பொருந்தி யிருக்கவே, எனக்கே லலிதாவைக் கலியாணம் செய்து விடுவது என்று முடிவு கட்டிவிட்டாள். நான் முதலில் ஆட்சேபித்தேன். ஆயினும், என் தாயார் பலவித மாய்மாலங்கள் செய்து என்னை ஒப்புக்கொள்ள வைத்தாள். உங்களுக்கெல்லாம் என் முதல் கலியாணத்தைப் பற்றித் தெரியாதிருக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்தாள். நல்ல வேளையாக, எல்லாம் நல்லதாகவே முடிந்துவிட்டன. நீங்கள் யோசிக்கவேண்டாம். இதே முகூர்த்தத்திலேயே பாலுவுக்கு லலிதாவைக் கலியாணம் செய்து கொடுத்து விடுங்கள்!" என்று மூச்சு விடாமல் கூறினான்.

சுந்தரமய்யர் சிறிது நேரம் யோசித்தார். எப்படியும் கலியாணத்தை நடத்திவிட வேண்டும் என்ற அவா மேலெழுந்தது. பாலுவும் எல்லா விதங்களிலும் திருப்திகரமான பையனாகத் தோன்றினான். மேலும், இவ்வளவு தூரம் தன்னைப் பற்றித் தான் பெற்ற பிள்ளையே பகிரங்கமாக இகழ்ந்து கூறிய பின்னர், குட்டியம்மாள் மீண்டும் தன் பொல்லாத்தனத்தைக் காண்பிக்க மாட்டாள் என்று அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. ஆகவே, அவர் நாகராஜனைப் பார்த்து, "சரி, அப்படியே செய்துவிடலாம்!" என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து கிளம்பினார்.

பிறகு என்ன நடந்தது என்று கேட்பானேன்? வேதியர்கள் மந்திரம் ஓத, மங்கள வாத்தியங்கள் முழங்க, கன்னியர்கள் கீதம் இசைக்க, சிரஞ்சீவி பாலு என்கிற பாலகிருஷ்ணன் சௌபாக்கியவதி லலிதாவின் கழுத்தில் மாங்கல்யதாரணம் செய்தான்.

ஒரு வாரம் கழித்துச் சாவித்திரி, தன் கணவனுடன் வீட்டிற்குள் நுழைந்த பொழுது, அபிராமியம்மாளுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் அளவிட்டுத்தான் கூற முடியுமோ?



உங்கள் பற்களை 60% அதிக செம்மையாகத் துலக்குகிறது!
நீர் குடிக்காது
நிறமுமேற்காது
விஷக் கிருமிகளகற்றப்
பட்ட கிளாஸ் ட்யூபுகளில்
பாக் செய்யப்பட்டது
ஒரு வருட
உத்தரவாதமுடையது
இப்பொழுது கிடைக்கும்
மிருகங்களின் மயிரே கிடையாது!
Dr. West's
Miracle-Tuft
MEDIUM
Dr. West's
TOOTH PASTE
எல். டி. ஸெய்மூர் & கோ
(இந்தியா) லிமிடெட்
பம்பாய் — கல்கத்தா
கராச்சி — மதராஸ்
டாக்டர் வெஸ்ட்ஸ்
டூத் பிரஷுகளும் டூத் பேஸ்டும்
Copyright
J.W.T.(I) LTD.

D. W. 6284



காற்றோடு போயிற்று!

கோமதி ஸ்வாமிநாதன்

முதல் காட்சி

[காலேஜ் ஹாஸ்டலின் ஒரு அறை. ராமு சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு வளையம் வளையமாகப் போகும் சிகரெட் புகையைப் பார்த்து ஆனந்தப் பட்டுக்கொண்டிருக்கிறான். இந்தச் சமயத்தில் அவனுடைய நண்பனான வாசு வருகிறான்.]

ராமு :—ஹல்லோ! இவ்வளவு நேரம் பொழுதே போகாமல் ஒண்டியாய்த் தவித்தேன். நல்ல வேளை, நீயாவது வந்தாயே! எங்கே தொலைந்திருந்தாய், இவ்வளவு நேரம்?

வாசு :—ஏன் பொழுது போகவில்லை? அடுத்த மாதம்தான் பரீட்சை வருகிறதே, சிறிது நேரமாவது புஸ்தகத்தைக் கட்டிக் கொண்டு அழுவதுதானே?

ராமு (நாடகபாணியில் நிமிர்ந்து உட்கார்ந்து):—சிவசிவா! என்ன காரியம் செய்யச் சொன்னாய்? சத்ருவின் காலில் போய் விழுந்து சரணாகதி அடைவது என் போன்ற வீர இளைஞர்களுக்கு அடுக்குமா? அதைவிட அவமானம் வேறு என்ன இருக்கிறது? ஷேக்ஸ்பியர் எனக்குத் தாயாதி; கம்பனுடன் கிரிமினல் வழக்கு; மில்டனுடன் சிவில் சூட்! என் அறையில் அவர்கள் புஸ்தகங்கள் இருந்தால்கூட அவை இரவில் வந்து என்னைப் பயமுறுத்தும் என்று எண்ணிச் சிநேகிதர்களுக்குத் தானம் பண்ணிவிட்டேன்!

வாசு :—சபாஷ்! உமது வீரத்தை யாம் மெச்சினோம்!

ராமு :—அப்படிச் சொல்லுங்க, பிரதர்! 'ஆண்டிக்கு எதுக்கடா அன்ன விசாரம்!' என்றானாம். படிப்பைப் பற்றி நமக்கென்ன கவலை? நான் படித்துச் சம்பாதித்துப் போடவேண்டும் என்று என் பெற்றோர் என்னைக் கலாசாலைக்கு அனுப்பினார்கள்? வாழ்க்கையைப் பல விதக் கோணங்களிலிருந்து பார்த்து அனுபவம் அடையத்தான் இங்கே என்னை அனுப்பினார்கள்!

வாசு :—புத்தி! புத்தி! ஜமீன்தார்வாள்! தெரியாமல் சொல்லிவிட்டேன். மன்னிக்க வேண்டும். அந்த சிகரெட் டப்பாவைக் கொஞ்சம் நகர்த்துங்க!

ராமு (சிகரெட் டப்பாவைத் திறந்து பார்த்து):—அடாடா! என்ன ஏமாற்றம்! நேற்று மாலைதான் ஐம்பது சிகரெட் வாங்கினேன். இப்போது ஒன்று கூட இல்லை! சரி, ஒரு நொடியில் வாங்கி வர ஏற்பாடு பண்ணுகிறேன்.

வாசு :—பரவாயில்லை: பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். நேற்று ராத்திரி உங்கள் ரூமிலே லைட் 'ப்யூசா'ப் (fuse) போயிடுத்தா?

ராமு :—ஏன்?

வாசு :—ஒருவேளை ராத்திரிப் பூரா சிகரெட்டையே கொளுத்தி வெளிச்சம் போட்டீங்களோ என்று கேட்டேன்!

[ராமு சிரித்துக்கொண்டே தன் புஸ்தக அலமாரியிலிருந்து தந்தி பாரம் ஒன்றை எடுத்து வருகிறான்.]

ராமு :—நீ 'ராத்திரி' என்று சொன்னவுடன்தான் ஞாபகம் வருகிறது. இன்றைக்குத்தானே, ஜில்ஜில் நாடகக் கம்பெனியோட 'தாராசசாங்கம்' ஆரம்பம்?

வாசு :—ஆமாம். பிரதர்! சீட் ரிசர்வ் பண்ணுவதற்காகத் தந்தி அடிக்கப் போகிறீர்களா?

ராமு :—இல்லை, இல்லை! தபால் பாங்கிலே பணம் வாங்குறாப்போல ஐந்நூறு ரூபாய் செக் ஒன்று இருக்கிறது. நம் அதிர்ஷ்டம், பாங்கிலே ஆடிட்டர்கள் கணக்குப் பார்த்துக்கிட்டு இருக்காங்களாம். செக் மாற்ற நாலு நாளாவது ஆகும். நம்ப 'பிரின்சிபின்'தான்

உனக்குத் தெரியுமே! முதல் நாளன்றே டிராமாவைப் பார்த்துத் தீரணும். அதனால், நூறு ரூபாய் தந்தி மணி யார்டர் பண்ணும்படி வீட்டுக்குத் தந்தி கொடுக்கப் போகிறேன்!

வாசு :—'திடுதிப்' பென்று தந்தி கொடுத்தா, கையிலே ரூபாய் வச்சிருக் காங்களோ, என்னவோ!

ராமு :—இந்தச் சில்லறைத் தொகைக் குக் கூடவா பஞ்சம்? ஊரிலே ரூபாய் அருப் பிடித்துக் கிடக்கிறது! இந்த வாரம் எங்க அப்பா பழைய 'பியூக்' மோட் டாரை விலைக்குக் கொடுக்கப் போவதாக எழுதி யிருந்தார். ஆகையால் ரூபாய் எப்படியும் கைவசம் இருக்கும்.

வாசு :—உனக்கென்ன அப்பா, மக ராஜன்!

[இந்தச் சமயத்தில் தபால்காரன் வந்து ராமுவின் கையில் ஒரு கார்டைக் கொடுத்துவிட்டுப் போகிறான். அதைப் படித்த ராமு முகத்தைச் சுளிக்கிறான்.]

வாசு :—என்ன, மிஸ்டர்! கல்யாணம் இல்யாணம் நிச்சயமா யிருக்குன்னு வீட் டிலேயிருந்து எழுதி யிருக்காங்களா?

ராமு :—நோ, நோ! கேப்ரன் காலேஜ் மிஸ் ரத்தினமணி இன்றைக்கு ஒரு மிக்ஸெட் டபிள்ஸ் டென்னிஸ் மாட்ச்சிக்கு வருவதாகப் போன வாரம் சொல்லி யிருந்தாள். சில அசந்தர்ப்பங் களால் வரமுடியவில்லை என்று எழுதி யிருக்கிறாள்.

வாசு :—பலமான ஏமாற்றந்தான்! நான் வரட்டுமா, பிரதர்! கொஞ்சம் படிக்கவேண்டும்.

[வாசு போகிறான்.]

ராமு (அவன் போன பிறகு, அங்க லாய்ப்புடன் கையிலிருக்கும் கார்டைப் பார்த்துக் கொண்டே):—நல்ல அப்பா வும் அம்மாவும் வாய்த்தார்கள் ஐயா, நமக்கு! வெறும் அழுகை! படி, படி என்று பிராணனை எடுக்கிறார்கள். எப்போ கேட்டாலும் பணம் இல்லை என்று ஒரே பாட்டு! குஷியா இருக்கிற வேளையிலே அரையணா கார்டை எழுதித் தொந்தரவு பண்றாங்க. இவங்களெல் லாம் இந்த உலகத்திலே பிறக்கவில்லை யென்று யார் அழுதார்கள்?

இரண்டாம் காட்சி

[கிராமாந்திரத்தில் ஒரு சாதாரண வீடு. கவலை தோய்ந்த முகத்துடன் முத் தையா பிள்ளை உட்கார்ந்திருக் கிறார். உள்ளேயிருந்து அவருடைய மனைவி காந்திமதி வருகிறாள்.]

காந்திமதி :—என்ன, தந்தி? நம்ப ராமுவின் உடம்புக்கு ஒன்றுமில்லையே!

முத்தையா பிள்ளை :—பரீட்சை விஷய மாய் நூறு ரூபாய் வேணுமாம்; தந்தி மணியார்டர் பண்ண வேண்டுமாம். முந்தா நாள்தான் சாப்பாட்டுக்கு அரிசி வாங்கக்கூடக் கைவசம் காசு இல்லை என்று ஒரு கார்டு எழுதினேன். அதைப் பார்த்தானோ, இல்லையோ!

காந்திமதி :—நம்ம ராமு அவசிய மில்லாமல் தந்தி கொடுத்திருக்க மாட் டான்! என்ன யோசனை பண்றீங்க? எழுந்திருச்சு ஏதாவது ஒரு வழி பாருங்க!

முத்தையா பிள்ளை :—ஒரு வழியு மில்லையே, என்ன செய்வது?

காந்திமதி :—உடம்பை உடம்பு என்று கூடப் பார்க்காமல் நம்ப பிள்ளை படிக் குது! இன்னும் ஒரு மாதத்தில் பரீட்சை எழுதி 'பாஸ்' பண்ணிவிட்டால் நம்ப கஷ்டமெல்லாம் விடிந்துபோகாதா?

முத்தையா பிள்ளை :—அந்த எண் ணத்தோடுதான் ஒரு கோட்டை விதைப்பாடு நிலத்தையும் விற்று, வீட் டையும் அடமானம் வச்சு அவனைக் காலேஜுக்கு அனுப்பினேன். இந்தக் காலத்திலே காசு முளைக்கிற மரம் கை வசம் இருந்தால்தான் பிள்ளைகளைக் காலேஜுக்கு அனுப்பலாம்போ லிருக் கிறது!

காந்திமதி :—இப்போது பழங் கதை பேசி என்ன பிரயோசனம்? செட்டியா ரோட உண்டியல் கடையிலாவது ரூபாய் வாங்கிக்கிட்டு வாங்க!

முத்தையா பிள்ளை :— அவனுக்கு வட்டி பாக்கியே இருநூறு ரூபாய்வரை அழவேண்டும். அடமான மில்லாமல் பைசா கொடுக்க மாட்டானே!

காந்திமதி :—அப்படின்னு கடைசியா அந்த ஒரு விஷயத்தையும் முடிச்சுப்பிட வேண்டியதுதான்!

முத்தையா பிள்ளை :—எந்த விஷயம்?

காந்திமதி :—நம்ப செவலைப் பசுவின் மேலே பெரிய வீட்டு நாயக்கருக்கு ஒரு கண்! அதை அவருக்கு ஓட்டிவிட வேண்டியதுதான்!

முத்தையா பிள்ளை :—நம்ப நிலைமை அவ்வளவு தூரம் வந்துவிட்டதா? லக்ஷ்மி போல இருக்கும் அந்தப் பசுவை விற்று விட்டு என்னாலே ஒரு நிமிஷம்கூட இருக்க முடியாது. அதோட பாலை வித்து அரை வயிற்றுக்காவது வழி பார்த்துக்கிட்டு இருக்கோம். அதைக் கொடுக்க உனக்கு எப்படித்தான் மனசு வருதோ?

காந்திமதி :— நிலைமை எனக்குத் தெரியாமலா இருக்கு? எவ்வளவோ

கஷ்டப்பட்டு, அரைப் பட்டினி கிடந்து இவ்வளவு நாள் பணம் அனுப்பியாகி விட்டது. இன்னும் ஒரு மாதம் கஷ்டத்தோடு கஷ்டமாய் அனுப்பினால், பிறகு அவன் சம்பாதிக்க மாட்டானா?

முத்தையா பிள்ளை:—பகவானுக்குத்தான் வெளிச்சம்! அவன் வந்து சம்பாதித்துப் போடும் வரை நான் உசிரோடு இருக்கேனோ என்னவோ! யார் கண்டார்கள்?—உம்......உன் ஆசையையும் தான் கெடுப்பானேன்? காயக்கரைப் போய்ப் பார்த்துப் பேசி முடிச்சு ரூபாய் வாங்கிக்கிட்டு வாரேன்!

காந்திமதி:—வரும்போதே ரூபாயைத் தந்தி மணியார்டர் பண்ணிட்டு வாங்க!

மூன்றும் காட்சி

[மறுநாள் ராமு சிகரெட் புகையால் ஆகாசக் கோட்டை கட்டிக்கொண்டிருக்கிறான். வாசு வருகிறான்.]

வாசு:—என்னப்பா! கண்ணெல்லாம் ஒரு மாதிரியா 'ஜிவுஜிவு'ன்னு இருக்கு! நேற்று ராத்திரி ரொம்ப நேரம் படித்தயோ?

ராமு:—அட, சாம்பிராணி! யாராவது படிச்சுக் கண்ணைக் கெடுத்துப்பாங்களா? நேற்று ராத்திரி 'தாராசசாங்க'த்திற்குப் போயிருந்தேன். என்ன ஜோர், என்ன குஷி! சோபா டிக்கெட்டிற்கு இருபத்தைந்து ரூபாய்தான் வாங்கினான். அந்த சீட் இருந்த குஷிக்குக் கண்ணை மூடிக்கொண்டு ஐம்பது ரூபாய் கொடுக்கலாம்போலிருந்தது!

வாசு:—நேற்று ஏதோ பாங்கி திறக்கவில்லை, 'செக்' மாறவில்லை என்றாயே?

ராமு:—அந்தப் பிச்சைக்கார பாங்க் திறக்கலேன்னு இவரோட 'ப்ரோகிராம்' மாறிப் போயிடும் என்று நினைத்தாயோ? நேற்றுக் காலையிலே நீ இருக்கிறபோது தானே எங்க அப்பாவுக்குத் தந்தி கொடுத்தேன்? நூறு ரூபாய் உடனே கதறிண்டு வந்தது!—இந்தா, இந்தா! இப்போ எடுத்துக்கோ. ஸ்டாக்கிலே இருக்கட்டும் என்று ஐந்து டப்பா சிகரெட் வாங்கி விட்டேன்!

வாசு (ஒரு சிகரெட்டை எடுத்துக் கொண்டு):—நான் வரேனப்பா! வேலையிருக்கிறது......

ராமு:—அதோ, பார்த்தாயா? நேற்று மாலை வாங்கின புது ரக பூட்ஸ்! எப்படி இருக்கு?

வாசு:—நீ வாங்கினால் கேட்கவா வேண்டும்? ரொம்ப நன்றாயிருக்கே! பெஸ்ட் செலக்ஷன்!

ராமு:—ஒரே விலை, முப்பத்தைந்து ரூபாய்! காசை விட்டெறிந்துத் தூக்கி வந்து விட்டேன். அதற்கு ஏகப்போட்டி!

வாசு:—அப்போ நேற்று வந்த நூறு ரூபாயையும் ஒரு தினுசா காலி பண்ணிட்டேன்னு சொல்லு!

ராமு:—அது இன்னுமா கையிலே இருக்கு? அப்போதே 'காற்றோடு போயிற்று!' ஐம்பது ரூபாய் உடனே வேண்டும் என்று இன்றைக்குக் காலையிலே அப்பாவுக்கு எழுதி விட்டேன்!

[வாசு போகிறான்; ராமு இன்னொரு சிகரெட்டை எடுத்து ஆனந்தமாகப் பற்ற வைக்கிறான்!]

அட, ராமச்சந்திரா!

சுபஸ்ரீ

சங்கீதக் கச்சேரி என்னமோ நடந்து கொண்டுதானிருந்தது. ஆனால் பாட்டை ரஸிப்பவர்களைவிட அரட்டை அடிப்பவர்கள்தான் சபையில் அதிகமாகக் காணப்பட்டனர்.

பாடகியின் வாயினின்று வெளிப்பட்ட அபஸ்வரங்கள் எனது பொறுமையின் எல்லையைச் சோதிக்க ஆரம்பித்தன. எவ்வளவு நாழிதான் இவ்வாறு இருப்பது? "என்ன சங்கீதம் வேண்டிக் கிடக்கு, ஸார்! கேட்கச் சகிக்கலை, போங்கோ!" என்றேன் அருகில் இருந்தவரிடம்.

"ஸார், நீங்க......கொஞ்சம்......"

"'செக்ரடரி' கிட்டே சொல்லக் கூடாதா என்கிறீர்களா? நாமெல்லாம் சொன்னால் யார் ஸார், கேட்கிறா?"

"மன்னிக்கணும்......பாடறது......"

"பாடறது யார், ஸார்? ஏதோ கத்துக்குட்டி! பெயர்கூட என்னவோ சொன்னார்களே—ஆமாம், லக்ஷ்மி ராமச்சந்திரனாம்! இவாளையெல்லாம் யார் ஸார், மேடைக்கு வரச் சொல்றா?"

அதற்குள் அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவர், "என்ன, ராமச்சந்திரா! உன் 'ஒய்ப்' ரொம்ப ரொம்ப நன்றாப் பாடுகிறாளே!" என்று சொல்லிக்கொண்டே முதுகில் ஒரு 'ஷொட்டுக்' கொடுத்தார்.

அவ்வளவுதான்! அதற்குமேல் அங்கே உட்கார்ந்திருப்பதற்கு எனக்கென்ன, பைத்தியமா பிடித்திருக்கிறது?



எல்லா வலிகளுக்கும்
ஸாரிடோன்
பத்தே நிமிஷத்தில் குணமளிக்கிறது

4

டெனர்..உயர்தர சிகரெட்டு என்று உபயோகிப்பவர் ஒவ்வொருவருக்கும் தெரியும்

T. 128. tm



JAMES CARLTON LIMITED, LONDON

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Pre
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



ALKI நவம்பர் 10, 1946

4 அண

கவி பாரதியார் ஞாபகார்த்த மண்டப நிதி & சரஸ்வதி கான சபை நிதிக்காக
24-11-46ல் ஞாயிறு மாலை 6 மணிக்கு
சிதம்பரம் ராஜா அண்ணாமலை டவுன் ஹாலில்



ஸ்ரீமதி
எம். எஸ். சுப்புலக்ஷ்மி
உதவும் சங்கீதக் கச்சேரி

*

சங்கீத [illegible]

மைசூர் டி. சௌடையா — பிடில்
கல்பாத்தி ராமநாதன் — மிருதங்கம்
கோயமுத்தூர் ராஜப்பையர் — கஞ்சிரா
ஆலங்குடி ராமச்சந்திரன் — கடம்

டிக்கட்டுகள்: ரூ. 25 15. 10. 5. 2.

*

அடியிற் கண்ட விலாசத்தில் ஸீட் ரிஸர்வேஷன் செய்து கொள்ளலாம்.

பம்பாய் ஸ்டோர்ஸ், சிதம்பரம் ★ ஆர். எஸ். ராமானுஜம், செக்ரடரி, நிதிக் கமிட்டி

தி இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்" வடக்கு பீச் ரோடு, மதராஸ்
கிளை ஆபீஸ்கள்: எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்ட் ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் பல முக்கியமான இடங்களிலும், பர்மாவிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்க வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 69,96,600
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 59,79,613
ரிஸர்வ் நிதி	ரூ. 56,87,200
டெபாஸிட்டுகள் 30-6-46 முடிய	ரூ. 17 கோடிக்கு அதிகம்

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

வெஜிடபில் கதம்ப ஊறுகாய்



வெள்ளரிக்காய், இஞ்சி, பாவக்காய், கொத்தவரைத் தண்டு, வாழைத் தண்டு, கத்தரிக்காய், பச்சை மிளகாய், பச்சை மிளகு — சொல்லும்போதே வாயில் ஜலம் ஊறுகிறது — முதலியவை சேர்த்து கைபடாமல் ஜிஞ்ஜா மிருதமாகத் தயாரிக்கப்பட்டது. வாய்க்கு வெகு ஜோர் உடம்பிற்கு பரம சுகம். இன்றே உங்கள் தேவைக்கு எழுதவும். இரு சைஸ்களில் கிடைக்கும்.

●

தயாரிப்பவர்கள்:

டி. எஸ். ஆர். & கோ.,

வாஸனை திரவிய வியாபாரிகள்
கும்பகோணம்

மதராஸ் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
ஸைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

கோயமுத்தூருக்கும் பாலக்காட்டுக்கும்
சோல் ஏஜண்டு:

B. பாலபட்டாபி,
வைசியாள் தெரு, கோயமுத்தூர்



அதிக வேலை, வியாகூலம், மிகுந்த பிரயாசை முதலியவைகளால் புஷ்டியான தாதுப் பொருள்கள் செலவழிவதால் உங்கள் சரீரம் குன்றிப் போய், பலஹீனமடைந்து தாழ்வுறுகின்றீர்கள். தாதுப் பொருள்களை மறுபடியும் பெறுவது அவசியம் — உங்கள் தேகத்திற்கு மறுபடியும் போஷாக்கு அளியுங்கள். அப்போது பழைய சுகத்தையும் பலத்தையும் அடையும் புதுமையான வழியை உணர்வீர்கள்.

டானிக் ஆகாரமாகிய விக்கல்ப் — சுத்தமாக, சரியாகப் பங்கிடு செய்யப்பட்ட ஒன்பது தாது உப்புக்களையும், அயோடின் ஆகாரத்தையும் உங்களுக்கு அளிக்கிறது. இத்தகைய உன்னதமான வஸ்துக்கள் உங்கள் தேகத்தில் சம்பந்தப்பட்ட உடனேயே நீங்கள் பலமடைய ஆரம்பிக்கிறீர்கள்; சோர்வு போய் சுறுசுறுப்பு ஏற்படுகிறது. தாழ்மை மறைகிறது. பலஹீனம் போய் திடமேற்படுகிறது. புதுமையான சுகாதாரத்துடன் இலங்குகின்றீர்கள். இன்றே "விக்கல்ப்" சாப்பிட ஆரம்பியுங்கள்.

VIKELP MINERAL TABLETS


விக்கல்ப் தாது பில்லைகள்

Ad. No. 5487.

REGD. NO. M. 4392



பெரீஸ் டோய்!!



பெரீஸ் பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு ஆரோக்யமான உணவு

Manufactured by PERRY & Co., USILAMPATTI, S. India

மதராஸ் ஸ்டி. ஏஜன்ட்ஸ் : சக்தி டிரேடிங் கம்பெனி
581, பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்